**ம.அ.8.சு.து.ந.க.எண்.எச்1/153/2009**
**ஆணையாளர் அவர்களின் 15.06.2009 நாளிட்ட குறிப்பு**

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :138/2009 பொருள் எண். 1

**வயது முதிர்வு ஓய்வு அனுமதி**

சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறை, மண்டலம்–8ல் பணிபுரியும் டாக்டர் (திருமதி) கே.எ.மீனாட்சி, என்பவர் 30.6.2009 அன்று வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வு பெறவுள்ளார். இவர் சென்னை மாநகராட்சியில் 14.11.1975 அன்று உதவி அறுவை சிகிச்சை மருத்துவராக பணியில் சேர்ந்தார். இவர் இப்பதவியில் பணியில் சேர்ந்த நாளான 14.11.1975 முதல் பணிவரன்முறைபடுத்தப்பட்டு தொடர்ந்து 14.11.1977 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது.

விழிப்பு அலுவலரின் 04.06.2009 நாளிட்ட குறிப்பில் இவர் மீது விசாரணை ஏதும் இல்லை என அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

தனியர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகை ஏதும் இல்லை இவர் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை.

இவர் வகிக்கும் பதவி இரண்டாம் நிலையைச் சார்ந்ததால் மன்றத்தின் அனுமதி பெற்றபின்னரே பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்க இயலும்.

சென்னை மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய முன்பணபாக்கி சரிகட்டப்படாமை, தணிக்கைத்தடை, சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏதேனும் ஏற்படுத்தியுள்ளது பின்னர் தெரியவரின் அவைகளுக்கு இவரை பொறுப்பாக்கி அத்தொகை அவரது ஓய்வூதிய பயன்களில் இருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு 30.06.2009 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க நியமனக்குழுவின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.8.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :139/2009 பொருள் எண். 2

**வயது முதிர்வு ஓய்வு**

திரு.டி.வி.பாலசுப்பரமணியன், உதவி செயற்பொறியாளர், பாலங்கள் துறை, அவர்கள் 30.06.2009 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வு பெறவுள்ளார். தனியர் வகிக்கும் பதவி சென்னை மாநகராட்சி பணியாளர் பிரிவில் வகுப்பு–2ன் கீழ் வருவதால் இவரை பணியிலிருந்து விடுவிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

தனியர் மீது துறை ரீதியாக ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இல்லை. தனியர் சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நீண்ட கால கடன்ஏதும் நிலுவையில் இல்லை. மேலும் அலுவலக முன்பணம் நேர்செய்தல் தணிக்கை தடை நிலுவைகள் ஏதும் உள்ளதா? என தனியர் பணியாற்றிய துறை / மண்டலங்களுக்கு குறிப்பு அனுப்பப்பட்டு பேருந்து சாலைதுறை, மண்டலம்–7, பாலங்கள் துறை, விவரங்கள் கிடைக்கப்பெற்றது. ஆனால் மழைநீர் வடிகால் துறையிலிருந்து இதுநாள் வரை எந்தவித பதிலும் பெறப்படவில்லை. எனவே, தணிக்கை தடைகள் மற்றும் முன்பணம் நேர்செய்தல் ஏதும் இருப்பதாக பின்னர் தெரியவரின் இதற்கு அன்னாரே பொறுப்பாவார். அன்னார் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பெற்று பாலங்கள் துறையில் பணியமர்த்தப்பட்டு பணியாற்றி வருகிறார். எனவே, குற்றப்பிரிவு மற்றும் குற்றப்புலனாய்வு மற்றும் சிறப்பு பிரிவு, விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு துறை, ஆகிய துறைகளில் இவர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இருப்பின் அதற்கு அன்னார் பொறுப்பாவார்.

இவர் மதுரை மாநகராட்சியில் 11.10.1974 முதல் 14.10.1993 வரை (18 ஆண்டுகள் 11 மாதம் 03 நாட்கள்) பணிபுரிந்து பணிமாறுதலில் 15.10.1993 அன்று சென்னை மாநகராட்சியில் உதவி பொறியாளராக பணியில் சேர்ந்துள்ளார். 15.10.1993 முதல் 30.06.2009 வரை (15 ஆண்டுகள் 09 மாதங்கள் 15 நாட்கள்) பணிபுரிந்துள்ளார். இவர் மீது தணிக்கை தடைகள் மற்றும் நிதி இழப்பீடு எதுவும் இருப்பது பின்னர் தெரியவரின் அவற்றிற்கு அவரை பொறுப்பாக்கி அன்னாரின் பணிக்கொடை மற்றும் ஓய்வூதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்கு உட்படுத்தியும் மற்றும் குற்றப்பிரிவு மற்றும் குற்றப்புலனாய்வு மற்றும் சிறப்பு பிரிவு விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு துறையிலிருந்து தனியர் மீது ஏதேனும் விசாரணை இருப்பது பின்னர் தெரியவரின் அதன் மீதான நடவடிக்கைக்குட்பட்டும் அன்னாரை 30.06.2009 அன்று பிற்பகல் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்கலாம்.

எனவே, திரு.டி.வி.பாலசுப்பரமணியன், உதவி செயற்பொறியாளர், பாலங்கள் துறை, அவர்களை மேற்கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்படுத்தி 30.06.2009 அன்று பிற்பகல் முதல் பணியிலிருந்து ஓய்வு பெற நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பா.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**<u>ம.அ3.ந.க.எண்.சு1/047/2009</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 23.03.2009 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :140/2009 பொருள் எண்.3

**<u>வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி</u>**

டாக்டர் எஸ்.டி.கீதா, சென்னை மாநகராட்சியில் முதல் முதலில் தற்காலிக மருத்துவ அலுவலராக 18.11.1975 அன்று பணியில் சேர்ந்து பின்னர் நிரந்தர மருத்துவ அலுவலராக 29.05.1979 அன்று பணியமர்த்தப்பட்டார். அன்னார் பிறந்த தேதி 28.02.1951 ஆகும். இவரது வயது முதிர்வு நாள்.28.02.2009 ஆகும். அன்னாரது பணி 29.05.1979 முதல் வரன்முறைப்படுத்தப்பட்டு 24.09.1981 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது.

விழிப்பு பணி அலுவலர் அவர்கள் 06.02.2009 நாளிட்ட குறிப்பில் தனியர் மீது எந்தவிதமான விசாரணையும் நிலுவையில் இல்லை என குறிப்பு வழங்கியுள்ளார்.

தனியர் மீது துறை ரீதியாக ஒழுங்கு நடவடிக்கை மற்றும் குற்றச்சாட்டுக்களோ நிலுவையில் இல்லை. அன்னார் சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் என்றும் கடன் தவணை ஏதும் நிலுவயில் இல்லை என சான்று வழங்கப்பட்டுள்ளது.

இவ்வலுவலக 27.02.2009 தேதியிட்ட செயல்முறை ஆணையின்படி இவர் மீது தணிக்கை தடைகள் தொடர்பாக நிதி இழப்பீடு மற்றும் முன்பணம் சரி செய்யப்படாமல் நிலுவையில் உள்ளது என பின்னர் தெரியவரும் பட்சத்தில் அவைகளுக்கு இவரைப் பொறுப்பாக்கி அத்தொகையினை ஓய்வூதியப் பணப்பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்கிற நிபந்தனைகளுக்குட்பட்டும் மற்றும் காலதாமத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் 28.02.2009 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல ஆணை வழங்கப்பட்டது.

எனவே, டாக்டர் எஸ்.டி.கீதா, மருத்துவ அலுவலர், டி.பி. கிளினிக், புளியந்தோப்பு, மண்டலம்–3 அவர்களை தணிக்கை தடைகள் தொடர்பாக நிதி இழப்பீடு மற்றும் முன்பணம் சரி செய்யப்படாமல் நிலுவையில் உள்ளது என பின்னர் தெரியவரும் பட்சத்தில் அவைகளுக்கு அன்னாரை பொறுப்பாக்கி அத்தொகையை ஓய்வூதியப்பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்கிற நிபந்தனைக்குட்பட்டும் மற்றும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் 28.02.2009 பி.ப. முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல ஆணை வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.3.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :141/2009 பொருள் எண்.4

**வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி**

கட்டடத்துறையில் உதவி செயற்பொறியாளராக பணியாற்றிய திரு.என்.அரசு, அவர்கள் 28.02.2009 அன்று பிற்பகல் வயது முதிர்வு காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்றார். இவர் வகித்த பதவி சென்னை மாநகராட்சி பணிப்பிரிவில் வகுப்பு–2ன் கீழ் வருகிறது. இவரை பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்க மன்றத்தின் ஒப்புதல் பெற வேண்டும்.

இதன் மீது தெரிவிப்பது யாதெனில், திரு.என்.அரசு, அவர்கள் ஓவர்சீயராக 03.06.1975 அன்று பிற்பகல் சென்னை மாநகராட்சி பணியில் சேர்ந்துள்ளார். பின்னர் இளநிலை பொறியாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார். இவர் பொறியியல் பட்டம் பெற்றதின் அடிப்படையில் உதவி பொறியாளராக மாற்றம் செய்யப்பட்டுள்ளார். ஆணையரின் 23.12.1993 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி உதவி செயற்பொறியாளராக பதவி உயர்வு பெற்று 29.12.1993 பிற்பகல் பணியில் சேர்ந்துள்ளார். இப்பணி நியமனம் 30.12.1993 முதல் பணிவரன்முறை செய்து ஆணையரின் 17.08.2002 நாளிட்ட செயல்முறை ஆணை. பொ.து.ந.க.எண்.இ3/36102/98ல் ஆணையிடப்பட்டுள்ளது. பின்னர் செயற்பொறியாளராக பதவி உயர்வு அளிக்கப்பட்டு 30.10.2007 அன்று பணியில் சேர்ந்துள்ளார். செயற்பொறியாளர் பதவிக்கான காலிப்பணியிடம் இல்லாத காரணத்தினால் உதவி செயற்பொறியாளராக பதவி இறக்கம் செய்யப்பட்டு உதவி செயற்பொறியாளராக 12.07.2008 அன்று மண்டல அலுவலகம்–2ல் பணியில் சேர்ந்து பணிமாற்று அடிப்படையில் மண்டலம்–8ல் பணியமர்வு செய்யப்பட்டார் ஓய்வு பெறும் சமயம் கட்டடத்துறையில் பணிபுரிந்து வந்தார். தனியர் மொத்தமாக 33 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றியுள்ளார்.

தனியர் மண்டல அலுவலகம்–8ல் பணியாற்றிய போது அவர் ஆற்றிய பணிகளில் குறைபாடுகள் காணப்பட்டு 22.09.2008 முதல் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு பின் 31.10.2008 முதல் பணியில் சேர அனுமதிக்கப்பட்டுள்ளார். பின்னர் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, விசாரணை நடைபெற்று ஒழுங்கு நடவடிக்கை முடிவு பெறாத நிலையில் 31.10.2008 அன்று பணியில் சேர அனுமதிக்கப்பட்டு கட்டடத்துறையில் பணியில் சேர்ந்து பணியாற்றி வந்தார். ஒழுங்கு நடவடிக்கையின் இறுதி முடிவை எதிர்பார்த்து தனியரை 28.02.2009 அன்று வயது முதிர்வு ஓய்வு பெற அனுமதிக்க மன்றத்தின் அனுமதி பெற கால அவகாசம் இல்லை என்பதால், மன்றத்தின் பின்னேற்பு பெறும் நிபந்தனையுடன் தனியர் ஓய்வு பெற அனுமதிக்கப்பட்டார்.

தனியர் மீது தணிக்கை தடைகள் மற்றும் தனியரால் பெறப்பட்ட முன் பணங்கள் நேர் செய்யப்படாமல் நிலுவையிலிருப்பதால் இதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சென்னை மாநகராட்சி விழிப்புக்குழுமத்தின் குறிப்பில் தனியர் மீது இன்றைய தேதியில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டது.

நிலுவையிலுள்ள ஒழுங்கு நடவடிக்கை மற்றும் தணிக்கை தடைகளை கருத்தில் கொண்டு இவர் மீது நிலுவையிலுள்ள தணிக்கை தடைகள் மற்றும் மாநகராட்சி நிதிக்கு இழுப்பீடு ஏற்படுத்தியது ஏதும் பின்னர் தெரியவரின் அதற்கு அவரை பொறுப்பாக்கி, அவற்றை அன்னாரின் பணிக்கொடை மற்றும் ஓய்வூதியத்தில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தியும், ஒழுங்கு நடவடிக்கைக்கு எவ்வித குந்தகமின்றியும், மன்றத்தின் பின்னேற்பு பெறும் நிபந்தனைக்குட்படுத்தியும் 28.02.2009 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

ஆணையரின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ1/36768/2008, நாள்.27.04.2009ல் தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையின் இறுதி முடிவாக தனியரை எச்சரித்தும், தற்காலிக பணிநீக்க காலம் 22.09.2008 முதல் 23.10.2008 வரை தகுதியுள்ள விடுப்பாக முறைப்படுத்தவும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்கூறப்பட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் திரு.என்.அரசு, உதவி செயற்பொறியாளர், கட்டடத்துறை அவர்களை 28.02.2009 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற அனுமதித்ததற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:க.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.க.கு.ந.க.எண்.அ2/520/2009**
**ஆணையாளர் அவர்களின் 15.06.2009 நாளிட்ட குறிப்பு**

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :142/2009 பொருள் எண். 5

**வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி**

திருமதி.எஸ். சந்திரா, கணக்கு அலுவலர், மண்டலம்–7 அவர்கள் 31.03.2009 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றார். சென்னை மாநகராட்சி, பணியில் கணக்கு அலுவலர் பதவியானது வகுப்பு 2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, இவ்வலுவலரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல மன்றத்தின் அனுமதி பெற வேண்டும்.

திருமதி.எஸ். சந்திரா, அவர்கள் சென்னை மாநகராட்சியில் 13.11.1973 அன்று இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தார். 21.07.1979 அன்று உதவியாளராகவும், 27.12.1997 அன்று பிரிவு மேலாளராகவும் பிறகு, 09.04.2007 முதல் கண்காணிப்பாளராகவும் பதவி உயர்வு பெற்றார்.

பின்னர் 22.09.2008 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி அரசின் உறுதியாக்கத்திற்கு உட்பட்டு, தற்காலிகமாக கணக்கு அலுவலராக பதவி உயர்வு அளிக்கப்பட்டு 24.09.2008 முற்பகல் முதல் கணக்கு அலுவலராக தொடர்ந்து பணிபுரிந்து வந்தார். மேற்படி தற்காலிகமாக கணக்கு அலுவலர் பதவி உயர்வு செய்யபட்டமைக்கு அரசின் உறுதியாக்கம் பெறப்பட்டுள்ளது.

04.03.2009 நாளிட்ட சென்னை மாநகராட்சி, விழிப்பு குழுமத்தில் இருந்து பெறப்பட்ட அறிக்கையின்படி திருமதி.எஸ். சந்திரா, கணக்கு அலுவலர், மண்டலம்–7 அவர்களின் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அன்னார் பணியாற்றிய துறைகளான மத்திய கணக்கு குழுமம், வருவாய்த்துறை, மண்டலம்–7 மற்றும் மண்டலம்–8லிருந்து பெறப்பட்ட குறிப்புகளில் இருந்து இது நாள் வரையில் பெறப்பட்ட தணிக்கை அறிக்கைகளில் (2005–2006) தனியரை தனிப்பட்ட முறையில் பொறுப்பாக்கும் தணிக்கை தடையோ, குறிப்போ இல்லை என அறியமுடிகிறது. மேலும், தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கையோ, விசாரணையோ முன்பண நிலுவை மற்றும் சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏதும் நிலுவையில் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, மண்டல அலுவலர்–7 அவர்களின் குறிப்பின்படி, தனியர் பணிபுரியும் “மண்டலம்–7ல் 2006–07 முடிய மட்டுமே தணிக்கை முழுமையாக முடிக்கப்பட்டு வரைவு தணிக்கை அறிக்கை ஒப்புதல் நிலையில் உள்ளது எனவும் அதற்கு பின் உள்ள காலத்தில் உடன்பின் தணிக்கை செலவு சீட்டுகள் மட்டுமே (12/08 முடிய) தணிக்கை முடிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளதாகவும் மேலும், வாலாய தணிக்கை முடிக்க பெறாத நிலையில் தணிக்கை தடை பற்றிய விவர அறிக்கை அளிக்க இயலாது“ எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும், 2005–06 முதல் 2008–09 வரையிலான ஆண்டுகளுக்கு தணிக்கை அறிக்கை பெறப்பட்டு அதில் தனியரை பொறுப்பாக்கும் தணிக்கை தடைகள் ஏதேனும் இருப்பின் அதன் மீது நடவடிக்கை எடுத்து பிடித்தங்கள் இருப்பது தெரியவரின் அதனை அன்னாரின் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியில் இருந்து பிடித்தம் மேற்கொள்ள சம்மத கடிதம் பெற்று கோப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

திருமதி.எஸ். சந்திரா, கணக்கு அலுவலர், மண்டலம்–7 அவர்களுக்கு சென்னை மாநகராட்சி அலுவலரின் கூட்டுறவு சங்கத்தில் கடன் தொகை நிலுவையில் ஏதுமில்லை என சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. அன்னார் மீது வேறு எந்த கடன் தொகைக்கான பிடித்தங்களும் இல்லை.

எனவே, திருமதி.எஸ். சந்திரா, கணக்கு அலுவலர் அவர்களை பொறுப்பாக்கும் தணிக்கை தடைகள் மற்றும் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏற்படுத்தியது பின்னர் தெரியவரின் அன்னாரது பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்வதற்குட்பட்டும் நியமனக்குழு மற்றும் மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டும் அன்னாரை 31.03.2009 அன்று பிற்பகல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற அனுமதி அளிக்கப்பட்டதற்கு “மன்றத்தின் பின்னேற்பு ஆணை“ வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.க.கு.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :143/2009 பொருள் எண்.6

**தன்விருப்ப ஓய்வு பின்னேற்பு அனுமதி**

டாக்டர் திருமதி.சி.எம்.பானுமதி, என்பவர் சென்னை மாநகராட்சியில் மருத்துவ அலுவலராக 23.08.1984 அன்று மகப்பேறு நலப்பிரிவில் பணியமர்ந்தார். 01.12.2008 தேதியிட்டு இவரது கோரிக்கையில் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக தன்விருப்ப ஓய்வு கோரியுள்ளார். இவர் 24 ஆண்டு 6 மாதம் தகுதியுள்ள பணிக்காலமாக பணியாற்றி உள்ளார்.

இவர் கீழ்கண்டுள்ளபடி பணியமர்ந்து, பணிவரன்முறை (ம) தகுதிகாண் பருவம் முடித்துள்ளார்.

| பதவி உயர்வு நாள் | பணி உறுதியாக்கம் (ம) பணிவரன்முறை நாள் | தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட நாள் |
|---|---|---|
| மருத்துவ அலுவலர் நாள்.23.08.1984 | அ.ஆ.806/சு(ம) கு.ந.து. நாள்.30.05.1991 சிறப்பு அதிகாரி மன்றத் தீர்மானம் எண்.1444/92, நாள்.06.08.1992 ஆணையரது செயல்முறை ஆணை எண்.மா.கு.ந. எண்.எப்4/2913/83, நாள்.03.09.1992 | 07.09.1986 அ.ஆ.806/சு(ம) கு.ந.து. நாள்.30.05.1991 சிறப்பு அதிகாரி மன்றத் தீர்மானம் எண்.1444/92, நாள்.06.08.1992 ஆணையரது செயல்முறை ஆணை எண்.மா.கு.ந. எண்.எப்4/2913/83, நாள்.03.09.1992 |

தனியர் மீது சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்திலும் மாநில மற்றும் ஊழல் தடுப்பு இயக்ககத்திலும் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று அறிக்கை பெறப்பட்டுள்ளது. இவர் சென்னை மாநகராட்சியில் நிதி சார்ந்த இழப்பீடு ஏதும் ஏற்படுத்தவில்லை. தனியர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை. நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்யவேண்டியது இல்லை. இவர் மீது தனிப்பட்ட முறையிலோ, கூட்டு பொறுப்பிலோ பொறுப்பாக்கி நிதி இழப்பீடு குறித்த தணிக்கை பத்திகள் நிலுவையில் இல்லை. அன்னாரது சம்பள சான்றின்படி எவ்வித பிடித்தங்களும் செய்ய வேண்டியதில்லை. சென்னை மாநகராட்சி குடியிருப்பு எதும் ஒதுக்கி தரப்படவில்லை என்றும் நிதி இழப்பீடு குறித்த தணிக்கை பத்திகள் நிலுவையில் இல்லை என சான்றளிக்கப்படுகிறது. சென்னை மாநகராட்சியில் இவருடைய பதவி–2ம் நிலை ஆகும். காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு 28.02.2009 பிற்பகல் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

எனவே, டாக்டர் திருமதி.சி.எம்.பானுமதி, மருத்துவ அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை என்பவரை நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு மற்றும் நீண்ட கால முன்பணம் பெற்று தீர்வு செய்யப்படாமல் ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு நிலுவையில் இருப்பது ஆகியவைகள் பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு இவரை 28.02.2009 அன்று பி.ப. தன்விருப்ப ஓய்வளித்து பணியிலிருந்து விடுவித்தற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி13/9282/2009**
**ஆணையாளர் அவர்களின் 11.06.2009 நாளிட்ட குறிப்பு**

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :144/2009 பொருள் எண். 7

**ஓய்வூதியம்**

திரு.பெ.தன்ராஜ், தலைமை பூச்சி தடுப்பு அலுவலர், சுகாதாரத்துறை அவர்கள் பணியிலிருந்து 31.01.2007 முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்றார். தனியர் 35 வருடங்கள் 05மாதங்கள் 30நாட்கள் (அ) 66 அரை ஆண்டுகள் தகுதிப்பணி புரிந்தமையால், துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை, நி.மு.எண்.485/எ4/2007, நாள்.12.04.2007 சான்றின்படி 01.02.2007 முதல் வயது முதிர்வு ஓய்வூதியமாக மாதம் ரூ.8,496/– இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/– மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.2,832/– தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3,55,473/– பெறவும் தகுதியுடையவராகிறார். மேற்கண்ட தணிக்கைசான்றில் வீடுகட்டும் முன்பணம் நிலுவை ரூ.62031/– என்பதற்கு பதிலாக தற்போது நிலுவையிலுள்ள தொகை ரூ.32,812/– மட்டும் தனியரின் பணிக்கொடையில் பிடித்தம் செய்ய சுகாதாரத்துறை குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குடும்ப ஓய்வூதியம் குறித்து தணிக்கைக்கு மீளஉட்படுத்தி தணிக்கைச்சான்றில் ஓய்வூதியரின் வாரிசுதாரர் பெயர் பதியப்படவேண்டும்.

மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல் சம்பந்தமாக துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை, அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இவர் சென்னை மாநகராட்சி இரண்டாம் வகுப்பு அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

ஆகையால், திரு.பெ.தன்ராஜ், தலைமை பூச்சி தடுப்பு அலுவலர், சுகாதாரத்துறை அவர்களுக்கு 01.02.2007 முதல் ஓய்வூதியமாக மாதம் ரூ.8,496/– இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/–ல் தணிக்கைத்தடையின் காரணமாக 25 விழுக்காடு தொகையான ரூ.87,500/– மற்றும் வீடுகட்டும் முன்பண வட்டி நிலுவைத் தொகை ரூ.32,812/–ஆக மொத்தம் ரூ.1,20,312/– பிடித்தம் செய்து மீதி தொகையான ரூ.2,29,688/– வழங்கவும், தனியரின் மீதுள்ள தணிக்கைத்தடைகளை நிவர்த்தி செய்தபின்பு பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்ட 25 விழுக்காடு தொகையை விடுவிக்கவும், மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.2,832/– (ரூபாய் இரண்டாயிரத்து எண்ணூற்று முப்பத்தி இரண்டு மட்டும்) தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3,55,473/– (ரூபாய் மூன்று லட்சத்து ஐம்பத்தி ஐந்தாயிரத்து நானூற்று எழுபத்தி மூன்று மட்டும்) வழங்கவும், தொகுத்துப் பெறுவதால் அவரது ஓய்வூதியம் ரூ.8,496/–லிருந்து ரூ.5,664/–ஆக குறைத்து வழங்கவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(சு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :145/2009 பொருள் எண். 8

**ஓய்வூதியம்**

திரு.டாக்டர், கே.கருணாகரன், உதவி சுகாதார அலுவலர், மண்டலம்–5, அவர்கள் கடந்த 22.10.2007 பிற்பகல் முதல் தன்விருப்ப காரணமாக ஓய்வு பெற்றார். 07.11.2008 நாளிட்ட ஆணையரது உத்தரவின்படி தனியருக்கு ஏற்கனவே ஓய்வூதியம் மற்றும் இதர பயன்கள் வழங்கப்பட்டது.

09.04.2009 நாளிட்ட உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடித எண்.நி.மு.எண்.0808/எ4/2009, நாள்.09.04.2009ன்படி திருத்திய ஓய்வூதிய பயன்களின் விவரம் பின்வருமாறு

திருத்திய தன்விருப்ப ஓய்வூதியம் ரூ.8516/– 23.10.2007 முதல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியம் தொகை ரூ.8346/–ஐ நேர் செய்து மீதம் வழங்கவும், தொகுப்புத் தொகை ரூ.3,99,477/– ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.3,91,595/–ஐ நேர் செய்து மீதம் தொகையான ரூ.7882/– வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குப்பின் அன்னாரது மனைவி திருமதி.கே.வெண்ணி, என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் ரூ.8516/– அன்னாருக்கு 65வயது பூர்த்தியாகும் வரை அல்லது இறப்பிற்கு பின் ஏழு ஆண்டுகள் இதில் எதுமுன்னரோ அதுவரை அதன் பின்னர் ரூ.6131/– வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அன்னார் சென்னை மாநகராட்சி பணியில் இரண்டாம் வகுப்பு அலுவலர் என்பதால் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

09.04.2009 நாளிட்ட தணிக்கைச்சான்றின்படி டாக்டர் திரு.கே.கருணாகரன், உதவி சுகாதார அலுவலர், மண்டலம்–5, அவர்கட்கு திருத்திய ஓய்வூதியப்பயன்கள் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.பி13/14822/2009
ஆணையாளர் அவர்களின் 18.05.2009 நாளிட்ட குறிப்பு

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :146/2009 பொருள் எண்.9

**ஓய்வூதியம்**

டாக்டர் கீதா பாஸ்கர்ராவ், மருத்துவ அலுவலர், மண்டலம்—7, அவர்கள் பணியிலிருந்து 30.11.2008 முதல் தன்விருப்ப ஓய்வு பெற்றார். தனியர் 27 வருடங்கள் 01 மாதங்கள் 28 நாட்கள் (அ) 54 அரை ஆண்டுகள் தகுதிப்பணி புரிந்தமையால், துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை, நி.மு.எண்.710/எ4/2009, நாள்.24.03.2009 சான்றின்படி 01.12.2008 முதல் தன்விருப்ப ஓய்வு ஓய்வூதியமாக மாதம் ரூ.9,063/— இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/— மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.3,021/— தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.4,13,998/— பெறவும் தகுதியுடையவராகிறார்.

ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது வாரிசுதாரர் கணவர் திரு.பி.பாஸ்கர்ராவ், அவர்கள் குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.9,063/— ஓய்வூதியரின் 65வயது முடியும் வரை அல்லது இறப்பிற்கு பின் ஏழு ஆண்டுகள் இதில் எதுமுன்னரோ அதுவரை அதன் பின்னர் குறைக்கப்பட்ட குடும்ப ஓய்வூதியம் ரூ.6042/— வழங்கவும் தகுதியுடையவராகிறார்.

மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல் சம்பந்தமாக துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை, அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இவர் சென்னை மாநகராட்சி இரண்டாம் வகுப்பு அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

ஆகையால், டாக்டர் கீதா பாஸ்கர்ராவ், மருத்துவ அலுவலர், மண்டலம்—7, அவர்களுக்கு 01.12.2008 முதல் ஓய்வூதியமாக மாதம் ரூ.9,063/— இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/—ல் தணிக்கைத்தடையின் காரணமாக 25 விழுக்காடு தொகையான ரூ.87,500/— பிடித்தம் செய்து மீதி தொகையான ரூ.2,62,500/— வழங்கவும், தனியரின் மீதுள்ள தணிக்கைத்தடைகளை நிவர்த்தி செய்தபின்பு பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்ட 25 விழுக்காடு தொகையை விடுவிக்கவும், மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.3,021/— (ரூபாய் மூவாயிரத்து இருபத்தி ஒன்று மட்டும்) தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.4,13,998/— (ரூபாய் நான்கு லட்சத்து பதிமுன்றாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று எட்டு மட்டும்) வழங்கவும், தொகுத்துப் பெறுவதால் அவரது ஓய்வூதியம் ரூ9,063/—லிருந்து ரூ.6,042/—ஆக குறைத்து வழங்கவும், தனியரது காலத்திற்குபின் அன்னாரது வாரிசுதாரர் கணவர் திரு.பி. பாஸ்கர்ராவ், அவர்கள் குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.9,063/— ஓய்வூதியரின் 65வயது முடியும் வரை அல்லது இறப்பிற்கு பின் ஏழு ஆண்டுகள் இதில் எதுமுன்னரோ அதுவரை அதன் பின்னர் குறைக்கப்பட்ட குடும்ப ஓய்வூதியம் ரூ.6042/— வழங்கவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ—18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி4/1206/2009**
**ஆணையாளர் அவர்களின் 15.05.2009 நாளிட்ட குறிப்பு**

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :147/2009 பொருள் எண். 10

**ஓய்வூதியம்**

சென்னை மாநகராட்சி வருவாய் துறையில் உதவி வருவாய் அலுவலராக பணிபுரிந்த திரு.ஆர்.தண்டபாணி, அவர்கள் 31.05.2008 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்றவர்க்கு 15.10.2008 நாளிட்ட தணிக்கைச் சான்றின்படி ஓய்வூதியப் பயன்கள் வழங்க சான்றளிக்கப்பட்டதனைத் தொடர்ந்து 02.01.2009 நாளிட்ட மன்றத் தீர்மானத்தின் மூலம் அனுமதிப்பெற்று இவ்வலுவலக 17.01.2009 நாளிட்ட செயல்முறை ஆணையில் ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்பட்டது. மேற்கண்ட மன்ற தீர்மானத்தில் குடும்ப ஓய்வூதியம் விவரம் நீங்கலாக அனுமதி பெற்றுள்ளது.

எனவே, 31.05.2008 பி.ப. முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்ற திரு.ஆர்.தண்டபாணி, ஓய்வூதியர் அவர்களின் மனைவி திருமதி.ட்டி.சுகுணா, அவர்களுக்கு தணிக்கைச் சான்றின்படி குடும்ப ஓய்வூதியமாக 21.05.2015 முடிய ரூ.6619/– அதன் பின்னர் 22.05.2015 முதல் ரூ.3972/– அனுமதித்தமைக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி4/1207/2009**
**ஆணையாளர் அவர்களின் 15.05.2009 நாளிட்ட குறிப்பு**

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :148/2009 பொருள் எண்.11

**ஓய்வூதியம்**

சென்னை மாநகராட்சி வருவாய் துறையில் உதவி வருவாய் அலுவலராக பணிபுரிந்த திரு.ஸ்ரீராமலு, அவர்கள் 30.04.2008 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்றவர்க்கு 23.10.2008 நாளிட்ட தணிக்கைச் சான்றின்படி ஓய்வூதியப் பயன்கள் வழங்க 30.12.2008 நாளிட்ட மன்றத்தின் அனுமதிப்பெற்று இவ்வலுவலக 17.01.2009 நாளிட்ட செயல்முறை ஆணையில் ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்பட்டது. மேற்கண்ட மன்ற தீர்மானத்தில் குடும்ப ஓய்வூதியம் விவரம் நீங்கலாக அனுமதி பெற்றுள்ளது.

எனவே, 30.04.2008 முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்ற திரு.ஸ்ரீராமலு, ஓய்வூதியர் அவர்களின் மனைவி திருமதி.எஸ்.வத்சலா, அவர்களுக்கு தணிக்கைச் சான்றின்படி குடும்ப ஓய்வூதியமாக 11.04.2015 முடிய ரூ.6207/– அதன் பின்னர் 12.04.2015 முதல் ரூ.3724/– அனுமதித்தமைக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>பொ.து.ந.க.எண்.பி4/36144/2008</u>
<u>ஆணையாளர் அவர்களின் 15.05.2009 நாளிட்ட குறிப்பு</u>

**<u>30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :149/2009 பொருள் எண்.12

**<u>ஓய்வூதியம்</u>**

சென்னை மாநகராட்சி வருவாய் துறையில் உதவி வருவாய் அலுவலராக பணிபுரிந்த திரு.முகமது உதுமான், அவர்கள் 31.05.2008 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்றவர்க்கு 28.10.2008 நாளிட்ட தணிக்கைச் சான்றின்படி ஓய்வூதியப் பயன்கள் வழங்க 30.12.2008 நாளிட்ட மன்ற தீர்மான எண்.658/08ல் அனுமதிப்பெற்று இவ்வலுவலக 17.01.2009 நாளிட்ட செயல்முறை ஆணையில் ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்பட்டது. மேற்கண்ட மன்ற தீர்மானத்தில் குடும்ப ஓய்வூதியம் குறித்து அனுமதி பெறப்படாமல் விடுபட்டுள்ளது.

எனவே, 31.05.2008 முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்ற திரு.முகமது உதுமான், ஓய்வூதியரின் காலத்திற்கு பிறகு அன்னாரின் மனைவி திருமதி.அலிமுன்னிசா, அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக 31.05.2015 முடிய ரூ.6000/– அதன் பின்னர் 01.06.2015 முதல் ரூ.3600/– வழங்கவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :150/2009 பொருள் எண்.13

**ஓய்வூதியம்**

சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறை, தொற்றுநோய் மருத்துவமனையில் பணிபுரிந்த திருமதி.ஜே.ஏ.ரமணி, ஏ.என்.எம். அவர்கள் 31.08.2008ல் ஓய்வு பெற்றார். தனியர் சென்னை மாநகராட்சி தொற்றுநோய் மருத்துவமனையில் 02.09.1980ல் ஏ.என்.எம். ஆக பணியில் சேர்ந்தார்.

தனியருக்கு தகுதிகாண்பருவம், பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. தனியர் தனது பணிக்காலத்தில் கடந்த 20.03.1985 முதல் 28.07.1987 வரை 870 நாட்கள் தொடர்ச்சியாக ஊதியமில்லா விடுப்பு எடுத்துள்ளார்.

தனியருக்கு ஓய்வூதியப்பயன்களில் முதல் கட்டமாக பொதுவைப்பு நிதி மற்றும் 5வது ஊதியக்குழுவின் நிலுவைத்தொகை ரூ.63,098/– வழங்கப்பட்டுள்ளது.

தனியருக்கு மற்ற ஓய்வூதியப்பயன்கள் பெறப்படுவதற்கு உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறைக்கு முழுக்கோப்பு அனுப்பப்பட்டது. அதில் தனியர் 20.03.1985 முதல் 28.07.1987 வரை முன்னறிவிப்பின்றி தொடர்ச்சியாக ஊதியமில்லா விடுப்பு எடுத்து உள்ளதால் அரசின் தளர்வாணை பெறப்பட்ட பின்னரே ஓய்வூதியப் பயன்கள் அனுமதிக்க இயலும் என கருத்துரைக்கப்பட்டுள்ளது. அதன்படி அரசின் தளர்வாணை பெறுவதற்கு அரசுக்கு கடிதம் அனுப்பிவைக்கும் பொருட்டு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:தொ.நோ.ம.மனை.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :151/2009 பொருள் எண். 14

**குடும்ப ஓய்வூதியம்**

மண்டலம்–8, கோட்டம்–126ல் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து 10.01.1993 அன்று பணிக்காலத்தில் காலமான திரு.ஜோகிமாரி, அவர்களது 2வது மனைவி திருமதி.ஜோ. தனலெட்சுமி, அவர்கள் கூட்டு காப்பீடு திட்டத் தொகை, குடும்ப ஓய்வூதியம் வேண்டி வட்டாச்சியர் மாம்பலம்–கிண்டி தாலுகா அவர்களால் வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழ் அளித்து, விண்ணப்பம் செய்தார். வாரிசு சான்றிதழில் கீழ்காணும் நபர்களை வாரிசுதாரர்களாக குறிப்பிட்டு வாரிசு சான்றிதழ் அளிக்கப்பட்டது.

| வ.எண் | வாரிசுதாரர்கள் பெயர் | வயது | இறந்தவருக்கு உறவு முறை |
|---|---|---|---|
| 01 | திருமதி.மாலா | 40 | முதல் மனைவி |
| 02 | செல்வி. நாகம்மா | 10 | முதல் மனைவி மகள் |
| 03 | செல்வன். மனோகரன் | 09 | முதல் மனைவி மகன் |
| 04 | செல்வன். பார்த்தசாரதி | 07 | முதல் மனைவி மகன் |
| 05 | திருமதி. தனலெட்சுமி | 35 | இரண்டாவது மனைவி |
| 06 | செல்வன்.நந்தகுமார் | 08 | 2வது மனைவியின் மகன் |
| 07 | செல்வன். லட்சுமணன் | 06 | 2வது மனைவியின் மகன் |

மேற்படி வாரிசு சான்றிதழில் முதல் மனைவி திருமதி.மாலா, எனக்குறிப்பிடப்பட்டு முதல் மனைவி மூலம் மூன்று குழந்தைகள் உள்ளன எனக் குறிப்பிடப்பட்டதன் அடிப்படையில் திருமதி.தனலெட்சுமி, அவர்களிடம் தங்களுக்கு இறப்புக்கால பயன்கள் வழங்க நீதிமன்றம் மூலம் மரபுரிமை சான்று பெற்று சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டதன் அடிப்படையில்15.06.2006 நாளிட்டு மரபுரிமை சான்று பெற்று சமர்ப்பித்தன் அடிப்படையில் அன்னாருக்கு கூட்டுக் காப்பீடு திட்டத் தொகை ரூ.60,000/– பெற்று வழங்கப்பட்டது.

திருமதி.தனலெட்சுமி, அவர்களுக்கு அன்னாரது கணவர் திரு.ஜோகிமாரி, அவர்கள் 10.01.1993 அன்று காலமானதால் குடும்ப ஓய்வூதியம் வழங்க தணிக்கை சான்று வழங்க வேண்டி தணிக்கைத் துறைக்கு அனுப்பப்பட்டதில் 10.12.2008 நாளிட்ட துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை அவர்களின் கடிதத்தில் முதல் மனைவி உயிரோடு இருக்கும்போது இரண்டாவது மனைவிக்கு பணப்பயன்களை வழங்கிட பெறப்பட்டு நீதிமன்ற ஆணை தமிழ்நாடு அரசு ஓய்வூதிய விதிகளுக்கு முரண்பாடாக உள்ளதால் அரசுக்கடிதம் 38669/ ஓய்வூதியம்/93–1 நிதி நாள்.25.05.93ன்படி இந்நிகழ்விற்கு அரசின் அனுமதி பெறப்பட வேண்டும் எனவும், அவ்வாறு பெறப்பட்டபின் மறைந்த திரு.ஜோகிமாரி, துப்புரவு பணியாளரின் குடும்ப ஓய்வூதியம் கருத்துரு மீது மேல்நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்கள்.

எனவே, மண்டலம்–8, கோட்டம்–126ல் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து 10.01.1993 அன்று காலமான திரு.ஜோகிமாரி, அவர்களது இரண்டாவது மனைவி திருமதி.தனலெட்சுமி, அவர்களுக்கு நீதிமன்ற மரபுரிமை சான்றின்படி ஓய்வூதியம் வழங்க அரசுக்கு கடிதம் அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.8.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.து.ந.க.எண்.இ1/314/2009**
**ஆணையாளர் அவர்களின் 25.05.2009 நாளிட்ட குறிப்பு**

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :152/2009 பொருள் எண்.15

**தேர்வு நிலை வழங்க அனுமதி**

திருமதி.பி.ரீட்டா, மன்றச் செயலாளர் அவர்கள் உதவி சட்ட அலுவலராக 05.12.1981 முற்பகல் முதல் பொறுப்பேற்றுள்ளார். நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.872, நாள்.1.12.1989ன்படி உதவி சட்ட அலுவலர் பணியில் 5.12.1981 முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணையிடப்பட்டுள்ளது. ஆணையர் (பொ) சென்னை மாநகராட்சி அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.இ1/6040/1997, நாள்.18.12.1997ன்படி உதவி சட்ட அலுவலர் பதவியிலிருந்து மன்றச் செயலாளராக ரூ.8000–275–13500 என்கிற ஊதிய விகிதத்தில் பணியமர்வு செய்யப்பட்டு 19.12.1997 முதல் பணிபுரிந்து வருகிறார். அரசாணை (பத்தாண்டு) எண்.201, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 19.04.2004ன்படி மன்றச் செயலாளராக பதவி உயர்வு வழங்கியதற்கு அரசு உறுதியாக்கம் வழங்கியுள்ளது.

கணக்கு அலுவலர் மி/அ அவர்கள் தெரிவித்துள்ளபடி தேர்வு நிலை உதவி சட்ட அலுவலர், ஊதிய விகிதமும், மன்றச்செயலாளர் பதவியின் சாதாரண நிலை ஊதிய விகிதமும் ஒன்றாதலால் தனியருக்கு அரசு ஆணை எண்.210,P & AR, நாள்.11.03.1987ல் கீழ்நிலை பதவிகளில் தேர்வு நிலை காலத்தையும், உயர் நிலை பதவியில் காலத்தையும் 10 ஆண்டுகள் கணக்கீட்டு 10 ஆண்டுகள் முடிவுற்ற நாளில் உயர்நிலை பதவியில் தேர்வு நிலை அளிக்கலாம் என்று ஆணையிடப்பட்டுள்ளதால் திருமதி.எப்.ரீட்டா, மன்றச்செயலாளர் அவர்கள் தேர்வு நிலை உதவி சட்ட அலுவலர் பதவியில் 21.12.1991 முதல் 18.12.1997 வரை 5ஆண்டுகள் 11 மாதங்கள் 29 நாட்கள் ஆகவும், மன்றச்செயலாளர் பதவியில் பணிபுரிந்த காலமான 19.12.1997 முதல் 18.12.2001 வரை 4 ஆண்டுகள் 1 நாட்கள் என கணக்கிட்டு ஆக மொத்தம் 10 ஆண்டுகள் முடிவடைந்ததால் 19.12.2001 அன்று மன்றச்செயலாளர் பதவியில் தேர்வு நிலை உயர்த்தி அனுமதிக்கலாம் என்றும், தனியரின் தேர்வு நிலை மன்றச் செயலாளர் ஊதிய விகிதமான ரூ.9100–275–14050ல் அடிப்படை ஊதியம் ரூ.10,750/–என நிர்ணயம் செய்யலாம் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தனியர் சம்பளமற்ற விடுப்பு ஏதும் இக்காலத்தில் துய்க்கவில்லை எனவும், இவர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, திருமதி.எப்.ரீட்டா, மன்றச்செயலாளர், மன்றத்துறை அவர்கள் தேர்வு நிலை உதவி சட்ட அலுவலர் ஊதிய விகிதமும், மன்றச்செயலாளர் பதவியின் சாதாரண நிலை ஊதிய விகிதமும் ஒன்றாதலால் தனியருக்கு அரசு ஆணை எண்.210 P& AR, நாள்.11.03.1987 கீழ்நிலை பதவிகளில் தேர்வு நிலை காலத்தையும், உயர் நிலை பதவியில் காலத்தையும் 10 ஆண்டுகள் கணக்கீட்டு 10 ஆண்டுகள் முடிவுற்ற நாளில் மன்றச்செயலாளர் பதவியில் 10 ஆண்டுகள் பணி நிறைவு செய்தமைக்காக 19.12.2001 முதல் தேர்வு நிலை அடைந்தவராக அறிவிக்கவும், தேர்வு நிலை மன்றச் செயலாளர் ஊதிய விகிதமான ரூ.9100–275–14050ல் அடிப்படை ஊதியம் ரூ.10,750/–என நிர்ணயம் செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ4.ந.க.எண் அ1/0097/08**
**ஆணையாளர் அவர்களின் 16.04.2009 நாளிட்ட குறிப்பு**

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :153/2009 பொருள் எண்.16

**தேர்வு நிலை வழங்க அனுமதி**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–4ல் செயற்பொறியாளர் மற்றும் மண்டல அலுவலர்–4(பொ) ஆக பணியாற்றி 31.12.2001 பி.ப. முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்ற திரு.ப்பி.முரஹரி அவர்கள் தனது கடிதத்தில் தான் 10 ஆண்டுகள் உதவி செயற்பொறியாளர் பதவியில் பணியாற்றி முடித்திருப்பதால் தனக்கு தேர்வுநிலை உதவி செயற்பொறியாளர் பதவி ஊதிய விகிதமும் மற்றும் ஊதிய நிர்ணயமும் செய்யும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

இது சம்மந்தமாக தெரிவித்துகொள்ளுவது யாதெனில், தனியர் உதவி செயற்பொறியாளராக சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.எ1/1331/79 நாள்.08.01.1979ன்படி அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு தற்காலிகமாக ரூ.750–50–1350 என்ற ஊதிய விகிதத்தில் பதவி உயர்வு அளிக்கப்பட்டது. இவர் 01.01.1979 முதல் உதவி செயற்பொறியாளராக பணியில் சேர்ந்தார். ஆனால் தனியரின் தற்காலிக உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வை அரசாணை (நிலை) எண்.71, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந3) துறை நாள். 31.03.2001ல் 01.12.1982 முதல் உறுதியாக்கம் செய்து ஆணையிடப்பட்டது. இவ்வரசாணையின் அடிப்படையில் தனியரின் தற்காலிக பணி உயர்வினை 01.12.1982 முதல் உதவி செயற்பொறியாளர் பதவியில் வரன்முறை செய்து சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ1/36102/98 நாள்.17.08.2002 மூலம் ஆணை வழங்கப்பட்டது. தனியர் 30.11.1992 அன்று உதவி செயற்பொறியாளர் பதவியில் 10 ஆண்டுகள் பணிக்காலத்தை முடித்துள்ளார். ஆகையால் தனியருக்கு 01.12.1992 முதல் தேர்வுநிலை உதவி செயற்பொறியாளர் பதவி ஊதிய விகிதம் வழங்கப்பட வேண்டும். மேற்கண்ட காலத்தில் (01.12.1982 முதல் 30.11.1992 வரை) தனியர் எந்தவிதமான சம்பளமில்லாத விடுப்பும் துய்க்கவில்லை. ஆகையால், இவருக்கு 01.12.1992 முதல் உதவி செயற்பொறியாளர் பதவியில் தேர்வுநிலை ஊதிய விகிதம் 28.03.1990 நாளிட்ட அரசாணைப்படி ரூ.2500–75–2800–100–4200யையும் மற்றும் 01.01.1996 முதல் திருத்திய தேர்வு நிலை ஊதிய விகிதம் 13.04.1998 நாளிட்ட அரசாணைப்படி ரூ.9100–275–14050ஐ வழங்கலாம்.

மேலும், உதவி செயற்பொறியாளர் பதவி சென்னை மாநகராட்சி பொறியாளர்கள் பணி விதிகளின்படி (Corporation of Chennai Engineering Service Rules) இரண்டாம் நிலை கீழ் வருவதால் 31.12.2001 பி.ப. அன்று வயது முதிர்வு ஓய்வு பெற்ற திரு.ப்பி.முரஹரி அவர்களுக்கு மன்றத்தின் (நியமனக்குழு மூலமாக) ஒப்புதலுடன் தேர்வுநிலை உதவி செயற்பொறியாளர் பதவி ஊதிய விகிதம் வழங்கப்பட வேண்டும்.

31.12.2001 பி.ப. அன்று வயது முதிர்வு ஓய்வு பெற்ற திரு.ப்பி.முரஹரி அவர்கள் சாதாரண நிலை உதவி செயற்பொறியாளர் பதவி ஊதிய விகிதம் ரூ.2200–75–2800–4000ல் ரூ.2575/–ஐ அடிப்படை ஊதியமாக 30.11.1992 (01.10.1992 முதல்) அன்று பெற்றுள்ளார். இவருக்கு நடைமுறையில் உள்ள அரசாணைகளின்படி சாதாரண நிலை உதவி செயற்பொறியாளர் பதவி ஊதிய விகிதத்தில் ஒரு ஊதிய உயர்வு (One Increment benefit) அளித்து இவருடைய அடிப்படை ஊதியத்தை ரூ.2650/– என தேர்வு நிலை உதவி செயற்பொறியாளர் பதவி ஊதிய விகிதம் ரூ.2500–75–2800–100–4200ல் 01.12.1992 முதல் நிர்ணயம் செய்ய வேண்டும். மேலும் 01.01.1996 முதல் திருத்திய தேர்வு நிலை உதவி செயற்பொறியாளர் பதவி ஊதிய விகிதம் ரூ.9100–275–14050ல் அடிப்படை ஊதியமாக ரூ.9375/–ஆக (பணப்பயன் 18.06.1997 முதல்) கணக்கீட்டுத்தாள்படி நிர்ணயம் செய்யவேண்டும்.

ஆகையால், மண்டலம்–4ல் செயற்பொறியாளர் மற்றும் மண்டல அலுவலர்–4(பொ) ஆக பணியாற்றி 31.12.2001 பி.ப. அன்று ஓய்வு பெற்ற திரு.ப்பி.முரஹரி அவர்களுக்கு 01.12.1992 முதல் உதவிசெயற்பொறியாளர் பதவியில் தேர்வுநிலை உதவி செயற்பொறியாளர் பதவி ஊதிய விகிதம் ரூ.2500–75–2800–100–4200ஐ அரசாணை நிலை எண்.304, நாள்.28.03.1990ன்படி வழங்கவும் மற்றும் இவருடைய அடிப்படை ஊதியம் ரூ.2650/– என்று தேர்வுநிலை உதவி செயற்பொறியாளர் பதவி ஊதிய விகிதம் ரூ.9100–275–14050ஐ அரசாணை நிலை எண்.162, நாள்.13.04.1998ன்படி வழங்கவும் மற்றும் இவருடைய அடிப்படை ஊதியம் ரூ.9375/– (பணப்பயன் 18.06.1997 முதல்) என்று திருத்திய தேர்வுநிலை உதவி செயற்பொறியாளர் பதவி ஊதிய விகிதம் 9100–275–14050ல் 01.01.1996 முதல் நிர்ணயம் செய்து அதற்குண்டான நிலுவைத் தொகையை வழங்கவும் மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.4.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ4.ந.க.எண் அ3/8482/2008**
**ஆணையாளர் அவர்களின் 22.01.2009 நாளிட்ட குறிப்பு**

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :154/2009 பொருள் எண்.17

**தேர்வு நிலை வழங்க அனுமதி**

டாக்டர் திருமதி. வி.ரேணுகா, அவர்கள் சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/11424/96, நாள்.10.12.1997ன்படி மருத்துவ அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டு 11.12.1997 முதல் பணிபுரிந்து வருகிறார்.

இவர் இப்பதவியில் பத்து ஆண்டுகளுக்கு மேல் எந்தவிதமான ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லாமலும், சம்பளமில்லா விடுப்பு எதுவும் எடுக்காமலும் பணிபுரிந்து வருகிறார். மேலும் இவரின் மருத்துவ அலுவலர் பதவியை அரசாணை (பத்தாண்டு) எண்.472, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந3) துறை நாள்.25.09.2001ன்படி பணியை 11.12.1997 முதல் வரன்முறைப்படுத்தியும், மன்றத்தீர்மான எண்.410/2004 நாள்.04.11.2204ன் 11.12.1999 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராகவும் கருதி ஆணை வழங்கப்பட்டுள்ளதால், பத்துஆண்டு பணிக்கான தேர்வுநிலை ஊதியம் 11.12.1997 முதல் நிர்ணயம் செய்ய வேண்டியுள்ளது. இவர் 01.10.2007 அன்று மருத்துவ அலுவலர் பதவியில் சாதாரணநிலை ஊதிய விகிதம் ரூ.8000–275–13500ன்படி ரூ.10750/–ஐ அடிப்படை ஊதியமாக பெற்று வருகிறார். இவர் பத்து ஆண்டு பணி முடித்த விவரம் பின்வருமாறு அறிவிக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | மருத்துவ அலுவலர் பணி நியமன நாள் | சம்பளம் இல்லா விடுப்பு துய்த்த விவரம் | பத்தாண்டு பணியை முடித்த நாள் |
|---|---|---|---|---|
| 1. | திருமதி. வி.ரேணுகா, மருத்துவ அலுவலர் | 11.12.1997 | ஏதும் இல்லை | 10.12.2007 |

| தேர்வு நிலைக்கு தகுதியுடைய நாள் | முந்தைய ஆண்டுகளில் தண்டனை வழங்கப்பட்ட விவரம் | தண்டனை முடிவுற்றதா | மருத்துவ அலுவலர் பதவியில் 11.12.2007 முதல் தேர்வு நிலைக்கு நிர்ணயம் செய்ய வேண்டிய ஊதிய விவரம் மற்றும் ஊதியம் |
|---|---|---|---|
| 11.12.2007 | ஏதுமில்லை | – – – | ரூ.9100–275–14050 |

24.11.2008 நாளிட்ட குறிப்பில் கணக்கு அலுவலர் / மண்டலம்–4, அவர்கள் மருத்துவ அலுவலர் பதவியில் 11.12.2007 முதல் தேர்வு நிலையில் புக அனுமதித்து அவரது ஊதியத்தை மருத்துவ அலுவலர் பதவியில் தேர்வு நிலை ஊதிய விகிதமான ரூ.9100–275–14050ன்படி 11.12.2007 முதல் ரூ.11025/– ஆக நிர்ணயம் செய்ய கருத்துரு வழங்கியுள்ளார்.

தனியரின் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பின் வகுப்பு–2ன் கீழ் வருகிறது. இப்பதவி வகிப்பவர்களுக்கு தேர்வுநிலை ஊதியம் அனுமதிக்க மன்றம் அரசாணை (நிலை) எண்.1381 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை, நாள்.03.09.1982ன்படி அதிகாரம் பெற்றுள்ளது.

எனவே, டாக்டர் திருமதி.வி.ரேணுகா, மருத்துவ அலுவலர், மண்டலம்–4, அவர்கள் மருத்துவ அலுவலர் பதவியில் பத்துஆண்டுகள் பணி முடித்துள்ளதால் 11.12.2007 முதல் தேர்வுநிலையில் புக அனுமதித்து, அவரது ஊதியத்தை, மருத்துவ அலுவலர் பதவியின் தேர்வுநிலை ஊதிய விகிதமான ரூ.9100–275–14050ன்படி 11.12.2007 முதல் ரூ.11025/–ஆக நிர்ணயம் செய்ய மாமன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.4.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**சு.து.ந.க.எண்சி1/7532/2006 (5)**
**ஆணையாளர் அவர்களின் 05.06.2009 நாளிட்ட குறிப்பு**

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :155/2009 பொருள் எண். 18

**பணிவரன்முறைப்படுத்துதல்**

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து வரப்பெற்ற பட்டியலில் இருந்து டாக்டர்.ஜி.சிவகுமார், என்பவர் இவ்வலுவலக செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/7532/2006 நாள்.21.02.2008ன்படி 03.03.2008 அன்று முதல் தற்காலிகமாக மருத்துவ அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டார். இவரது பணி நியமனத்திற்கு சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் 1919, விதி 85(3)(b)ன்படி அரசின் உறுதியாக்கம் வேண்டி அரசிற்கு செயற்குறிப்புகள் அனுப்பப்பட்டது.

அரசாணை (ப) எண்.144, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை நாள்.31.03.2009ன் வாயிலாக தனியரின் பணி நியமனத்திற்கு அரசு உறுதியாக்கம் வழங்கியுள்ளதை தொடர்ந்து இவரது பணி வரன்முறைப்படுத்தப்பட வேண்டும்.

எனவே, டாக்டர் ஜி.சிவகுமார், என்பவர் சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறையில் 03.03.2008 அன்று முதல் மருத்துவ அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டதற்கு அரசு உறுதியாக்கம் வழங்கியுள்ளதால் இவர் பணியில் சேர்ந்த நாளான 03.03.2008 முதல் வரன்முறைப்படுத்திட நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**சு.து.ந.க.எண்சி1/002583/2009**
**ஆணையாளர் அவர்களின் 05.06.2009 நாளிட்ட குறிப்பு**

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :156/2009 பொருள் எண்.19

**பணிவரன்முறைப்படுத்துதல்**

சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறையில் உதவி சுகாதார அலுவலராக பணிபுரிந்து வந்த டாக்டர்.எஸ்.கிருஷ்ணா, என்பவர் இவ்வலுவலக செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ2/30872/ 2008, நாள்.10.11.2008ன்படி 14.11.2008 முற்பகல் முதல் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு கூடுதல் சுகாதார அலுவலராக பதவி உயர்வு அளித்து பணி நியமனம் செய்யப்பட்டார். இவரது பதவி உயர்வுக்கு சென்னை மாநகராட்சி சட்டம் விதி 85(3) (b)ன்படி அரசின் உறுதியாக்கம் பெற அரசிற்கு செயற்குறிப்புகள் அனுப்பப்பட்டது.

அரசாணை (ப) எண்.168, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை நாள்.21.04.2009ன் வாயிலாக தனியரின் பணி நியமனம் பதவி உயவு செய்யப்பட்டதற்கு அரசு உறுதியாக்கம் வழங்கியுள்ளதை தொடர்ந்து இவரது பணி வரன்முறைப்படுத்தப்பட வேண்டும்.

எனவே, டாக்டர் எஸ்.கிருஷ்ணா, உதவி சுகாதார அலுவலர், சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறை என்பவரை 14.11.2008 முற்பகல் முதல் கூடுதல் சுகாதார அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டதற்கு அரசு உறுதியாக்கம் வழங்கியுள்ளதால் 14.11.2008 முற்பகல் முதல் இவரது பணி வரன்முறைப்படுத்திட நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**க.து.ந.க.எண்இ1/1390/2009**
**ஆணையாளர் அவர்களின் 18.05.2009 நாளிட்ட குறிப்பு**

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :157/2009 பொருள் எண்.20

**பணிவரன்முறைப்படுத்துதல்**

அரசாணை (ப) எண்.11, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந3) துறை, நாள். 11.01.2007ன் அடிப்படையில் வழங்கப்பட்ட 12.01.2007 நாளிட்ட ஆணையரின் செயல்முறை ஆணை. பொ.து.ந.க.எண்.ஈ1/26949/2006, மண்டலம்–8ல் செயற்பொறியாளராக பணியாற்றிய திரு.ப்பி.முருகேசன், அவர்களை பணிமூப்பு குறித்து நீதி மன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்குகளின் மீது நீதிமன்றம் வழங்கவிருக்கும் இறுதி தீர்ப்பிற்குட்பட்டு தற்காலிகமாக பதவி உயர்வு அளித்து கண்காணிப்பு பொறியாளராக ரூ.14300–400–18300 எனும் காலமுறை ஏற்ற ஊதியவிகிதத்தில் கட்டடதுறையில் பணியமர்த்தி ஆணை வழங்கப்பட்டது. தனியர் 18.01.2007அன்று பணியில் சேர்ந்துள்ளார். கண்காணிப்பு பொறியாளர் பதவியில் பணிவரன்முறை செய்ய வேண்டும்.

தனியர் வகிக்கும் பதவி சென்னை மாநகராட்சி பொறியாளர் பணித் தொகுப்பில் வகுப்பு–1Bயில் வருகிறது. இவ்வகுப்பில் நியமனம் செய்யப்படும் அலுவலர்களின் பணியினை வரன்முறை செய்ய மன்றத்தின் ஒப்புதல் பெற வேண்டும்.

எனவே, திரு. ப்பி.முருகேசன், கண்காணிப்பு பொறியாளர் ( மேற்பார்வை பொறியாளர்) (கட்டடம்) அவர்களின் பணியினை கண்காணிப்புபொறியாளர் பதவியில் பணியில் சேர்ந்தநாள் 18.01.2007 முதல் பணி வரன்முறை செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:க.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.ஈ1/25930/04**
**ஆணையாளர் அவர்களின் 11.06.2009 நாளிட்ட குறிப்பு**

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :158/2009 பொருள் எண். 21

**பணிவரன்முறைப்படுத்துதல்**

31.08.2006 நாளிட்ட மன்ற தீர்மானத்தில், எட்டு உதவி பொறியாளர்கள் / இளநிலை பொறியாளர்கள் (மின்சாரம் ) பெயர்களை கொண்ட உதவி கோட்ட மின் பொறியாளர் பதவி உயர்வுக்கான தேர்ந்த பட்டியலுக்கு அங்கீகாரம் பெற்று, 11.09.2006 நாளிட்ட ஆணையரின் செயல்முறை ஆணை மூலமாக அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு, உதவி கோட்டமின் பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டது, பதவி உயர்வு வழங்கப்பட்ட எட்டு பொறியாளர்களும் , 12.09.2006 பி.ப அன்று உதவி கோட்ட மின் பொறியாளர்களாக பதவியேற்றனர்.

அரசாணை (ப) எண்.543, ந.நி.ம.கு.வ.(மா.ந3) துறை, நாள்.29.12.2008ல் உதவி கோட்ட மின் பொறியாளர்களாக பதவி உயர்வு பெற்ற கீழ்காணும் எட்டு உதவி பொறியாளர்கள் / இளநிலை பொறியாளர்களுக்கு, ரூ. 8000–275–13500 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் பதவி உயர்வளித்து பணிநியமனம் செய்யப்பட்டமைக்கு அவர்கள், அப்பணியில் சேர்ந்த நாளான 12.09.2006 பிற்பகல் முதல் உறுதியாக்கம் செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

1. திரு. எம். ராம சந்திர செனாய் , இளநிலை பொறியாளர்
2. திரு. சி. ஏழுமலை, உதவி பொறியாளர்
3. திரு. டி. உதய குமார் , இளநிலை பொறியாளர்
4. திரு. பி. நாகேஸ்வரன் போட்டி, இளநிலை பொறியாளர்
5. திரு. ஆர். ஜெயராமன், உதவி பொறியாளர்
6. திரு. எம். பரந்தாமன், உதவி பொறியாளர்
7. திருமதி. ஆர். விஜயலட்சுமி, உதவி பொறியாளர் மற்றும்
8. திரு எம்.பி. மோகன், உதவி பொறியாளர்

அரசின் உறுதியாக்கம் பெறப்பட்டுள்ள நிலையில் தனியர்கள் வகித்து வரும் பதவி மாநகராட்சி பணிவிதிகளின்படி , வகுப்பு 2ன் கீழ் வருவதால், பணிவரன் முறைப்படுத்த மன்றத்தின் அனுமதி பெறப்படல் வேண்டும்.

எனவே, உதவி கோட்ட மின் பொறியாளர்களாக பதவி உயர்வு பெற்று 12.09.2006 அன்று பணியில் சேர்ந்த மேற்சொன்ன எட்டு பொறியாளர்களுக்கும், அரசின் உறுதியாக்கம் பெறப்பட்டுள்ள நிலையில், பணிவரன்முறை செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்4/1998/2009**
**ஆணையாளர் அவர்களின் 16.06.2009 நாளிட்ட குறிப்பு**

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :159/2009 பொருள் எண்.22

**வெளிநாடு செல்ல தடையின்மை சான்று வழங்க அனுமதி**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறை, பெருமாள்பேட்டை, மண்டலத்தில், மருத்துவ அலுவலராக பணிசெய்து வரும் டாக்டர் திருமதி.B.தரணி என்பவர், அமெரிக்க ஐக்கிய நாட்டில் வசிக்கும் தன்னுடைய மகளை காண்பதற்காக செல்ல வேண்டியுள்ளதால் 04.07.2009 முதல் 07.09.2009 வரை 66 நாட்கள் ஈட்டிய விடுப்பில் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு பயணம் மேற்கொள்ள தடையின்மை சான்றிதழ் வழங்குமாறு 03.06.2009 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக்கொண்டு விண்ணப்பித்துள்ளார்.

இது குறித்து தெரிவிப்பது யாதெனில், டாக்டர் திருமதி.B.தரணி அவர்கள் சென்னை மாநகராட்சியில், 02.06.1986ல் மருத்துவ அலுவலராக பணியமர்த்தப்பட்டு பணி செய்து வந்தார்கள். தனியருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் பணிவரன்முறைப்படுத்தி தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் மீது இத்துறையில் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை. தனியர் அவர்களின் கணக்கில் 207 நாட்கள் ஈட்டிய விடுப்பு உள்ளது. சென்னை மாநகராட்சி விழிப்புத் துறையிலிருந்தும் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர், பாதுகாப்பு பிரிவு, குற்றப்புலனாய்வு அலுவலகத்திலிருந்தும் தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என அறிக்கை பெறப்பட்டு கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

டாக்டர் திருமதி.B.தரணி மருத்துவ அலுவலர் என்பவர், தனது கடிதத்தில் தனது பயணச்செலவு முழுவதும் தனது கணவர் ஏற்பதாக தெரிவித்து அதற்கான ஒப்புதல் கடிதம் பெற்று சமர்ப்பித்துள்ளார்.

தனியர் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு பயணம் மேற்கொள்ள கடவுசீட்டு பெறுவதற்கு மன்ற தீர்மான எண்.354/2006, நாள்.31.08.2006 மூலமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவர் பதவி வகுப்பு 2ன் கீழ் வருவதால் அயல்நாடு பயணத்திற்கு செல்ல மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும். இதன் பொருட்டு தெரிவிப்பது யாதெனில் சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் வெளிநாடு செல்வதற்கு அரசாணை எண்.259 பணியாளர் மற்றும் நிர்வாக சீர் திருத்ததுறை நாள்.17.12.2007ல் குறிப்பிட்டுள்ள கீழ் காணும் நிபந்தனைக்குட்பட்டு அனுமதி அளிக்கப்படுகிறது.

நிபந்தனைகள் பின்வருமாறு:–

வெளிநாடு செல்லவிருக்கும் இவர் வெளி நாட்டில் தங்கும் போது வேலை வாய்பை ஏற்கவோ அல்லது பயிற்சியிலோ மற்றும் படிப்பிலோ கலந்துக் கொள்ளக்கூடாது.

1. வெளிநாடு செல்லும் பயணச்செலவு உட்பட எந்தவிதமான செலவுகளையும் சென்னை மாநகராட்சி ஏற்காது.
2. அவர் வெளிநாட்டில் இருக்கும் போது சென்னை மாநகராட்சியின் பணியைத் துறக்க விண்ணப்பிக்கக்கூடாது. மீறி அவர் பணி துறக்க விண்ணப்பித்தால் எக்காரணம் கொண்டும் அக்கோரிக்கை ஏற்கப்படமாட்டாது.
3. வெளிநாட்டில் தங்கும்போது வியாபாரத்திலோ அல்லது பணி நியமனத்திற்காகவோ இது போன்ற சம்பந்தப்பட்ட வேலைகளில் ஈடுபடக்கூடாது.
4. தடையின்மை சான்றிதழ் வழங்கப்படும் நாளிலிருந்து தனியர் அவர்கள் தெரிவித்துள்ள நாட்டிற்கு பயணம் செல்ல 6 மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.
5. வழங்கப்படும் தடையின்மை சான்றிதழ் மூலம் பெற்ற கடவுச்சீட்டு பயன்படுத்தி முன்னனுமதியின்றி அடுத்த வெளிநாடு பயணத்திற்கு பயன்படுத்தக்கூடாது.

மேற்கண்ட நிபந்தனைகளுடன் இவ்வலுவலருக்கு வழங்கப்படும் தடையின்மை சான்றிதழ் வழங்கப்படும் நாளிலிருந்து 6 மாதங்களுக்கு அவரால் தெவிக்கப்பட்டிருக்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு செல்ல மட்டுமே பொருந்தும் என தெரிவித்து டாக்டர்.திருமதி.B.தரணி, மருத்துவ அலுவலர், என்பவர் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு பயணம் மேற்கொள்ள தடையின்மை சான்றிதழ் வழங்க மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலம் வேண்டடப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

## 30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :160/2009 பொருள் எண். 23

### பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்

சென்னை மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, சைதாப்பேட்டையில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.என்.பார்த்தசாரதி, அவர்கள் கடந்த 06.09.2001 முதல் 30.09.2001 வரையில் ஈட்டியவிடுப்பு கடிதம் அளித்து 01.10.2001 முதல் எவ்வித முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததாலும் மே 2001 முதல் பிரதி மாதமும் 10 முதல் 15 நாட்கள் மருத்துவ விடுப்பும் துய்ப்பதால் பள்ளியில் நிர்வாக பணிகளுக்கு குந்தகம் ஏற்பட்டதைத் தொடர்ந்து உரிய விளக்கம் கோரி குறிப்பாணைகள் தனியர் பள்ளிக்கு அளித்த முகவரிக்கு அனுப்பப்பட்டதில் முகவரியில் தனியர் இல்லாததால் சார்வாகாமல் திருப்பப்பட்டதைத் தொடர்ந்து அன்னார் மீது சென்னை மாநகராட்சி 3ஆம் மற்றும் 4ஆம் நிலைப் பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 9(2)ன் கீழ் பின்வரும் நான்கு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு விளக்கம் கோரப்பட்டது.

<u>குற்றச்சாட்டு–1:</u> 2001ஆம் ஆண்டு மே மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் 10 முதல் 16 நாட்கள் மருத்துவ விடுப்பு எடுப்பதால் பள்ளியின் நிர்வாக பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது.

<u>குற்றச்சாட்டு–2:</u> திரு.என்.பார்த்தசாரதி, இளநிலை உதவியாளர், 06.09.2001 முதல் 30.09.2002 வரை ஈட்டியவிடுப்பிலிருந்து 01.10.2001 முதல் பணிக்கு வராமலும் அதற்கான விடுப்பு விண்ணப்பம் சமர்ப்பிக்காமலும் இருந்துள்ளார்.

<u>குற்றச்சாட்டு–3:</u> தனியரின் மேற்கண்ட செயல்களுக்காக விளக்கம் சமர்ப்பிக்க தெரிவிக்கும் குறிப்பாணைகள் தனியரால் தெரிவிக்கப்பட்ட விலாசத்திற்கு அனுப்பப்பட்டதில் தனியர் இவ்விலாசத்தில் இல்லை என்று அலுவலகத்திற்கு திருப்பப்பட்டுள்ளதால் தனியர் வசிக்கும் விலாசத்தை தான் பணிபுரியும் அலுவலகத்திற்கு தெரிவிக்காமல் இருந்துள்ளார்.

<u>குற்றச்சாட்டு–4:</u> தனியரின் மேற்கண்ட செயல்கள் அலுவலக விதிகளை அசட்டை செய்வதாகவும் விதிகளுக்கு முரணாகவும் உள்ளது.

மேற்கண்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட 25.02.2002 நாளிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணை தனியர் அலுவலகத்திற்கு தெரிவித்த முகவரிக்கு அனுப்பப்பட்டதில், தனியர் அவ்விலாசத்தில் இல்லை எனத் திருப்பப்பட்டது. இந்நிலையில், தனியர் மீதான குற்றச்சாட்டுகள் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டதில், தனியர் விசாரணை அலுவலருக்கு சமர்ப்பித்த 27.12.2002 நாளிட்ட விளக்கத்தில் தன் மீதான குற்றச்சாட்டுகளுக்கு பின்வருமாறு விளக்கம் தெரிவித்துள்ளார்.

<u>குற்றச்சாட்டு–1க்கான விளக்கம்:</u> தன்னுடைய உடல்நிலை சரியில்லாத காரணத்தால் மருத்துவ விடுப்பு எடுக்க வேண்டிய சூழ்நிலையில் மருத்துவ விடுப்பு எடுத்து அதற்குரிய மருத்துவ சான்றுகள் சமர்ப்பித்து தன்னுடைய பணிப்பதிவேட்டில் ஜுலை 2001 வரையில் பதியப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

<u>குற்றச்சாட்டு–2க்கான விளக்கம்:</u> 30.09.2001 வரையில் ஈட்டியவிடுப்பிலிருந்து பின்னர் 31.03.2003 வரையில் சம்பளமில்லாத விடுப்பு கடிதங்கள் அனைத்தும் அஞ்சலிட்ட சான்று (Certificate of Posting) செய்துள்ளதாகவும் இதற்கான சான்றுகள் இணைத்துள்ளார்.

<u>குற்றச்சாட்டு–3க்கான விளக்கம்:</u> தன்னுடைய பணிக்காலத்தில் விதிகளை அசட்டை மற்றும் முரணாக நடந்து கொண்டது கிடையாது எனவும், மேலும், 01.10.2001 நீட்டிக்கப்பட்ட விடுப்பு கடிதத்தை தவிர மற்ற கடிதங்கள் மட்டும் பழிவாங்கும் நோக்குடன் ஆசிரியை கல்வித்துறைக்கு சமர்ப்பித்துள்ளார் என தெரிவித்துள்ளார்.

விசாரணை அலுவலர் தனது 08.09.2003 நாளிட்ட விசாரணை அறிக்கையில் தனியர் மீதான முதல் மற்றும் இரண்டாவது குற்றச்சாட்டுகள் நிரூபணமாகவில்லை எனவும், ஏனைய மூன்று மற்றும் நான்காவது குற்றச்சாட்டுகள் நிரூபணமாவதாகவும் தெரிவித்துள்ளார்.

விசாரணை அறிக்யின் நகல் தனியருக்கு சார்வு செய்யப்பட்டு அதன் மீது தனியரின் 06.10.2003 நாளிட்ட கூடுதல் விளக்கம் பெறப்பட்டது. தனியர் மீதான இவ்வொழுங்கு நடவடிக்கையின் அனைத்து முக்கிய அம்சங்களும் அட்டவணைப்படுத்தப்பட்டு கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

தனியர் தன்னை மீண்டும் பணியில் சேர 06.02.2004 நாளிட்ட கடிதத்தின் மூலம் அனுமதி கோரியதைத் தொடர்ந்து அன்னார் மீதான ஒழுங்கு நடவடிக்கைக்கு தனியர் தன்னை மீண்டும் பணியில் சேர 06.02.2004 நாளிட்ட கடிதத்தின் மூலம் அனுமதி கோரியதைத் தொடர்ந்து அன்னார் மீதான ஒழுங்கு நடவடிக்கைக்கு எவ்வித குந்தகமின்றி மீண்டும் பணியில் சேர 06.02.2004 நாளிட்ட கல்வி அலுவலர் அவர்களின் ஆணைப்படி அனுமதிக்கப்பட்டு தனியர் 06.02.2004 முதல் மீண்டும் பணியில் சேர்ந்துள்ளார்.

**க.து.ந.க.எண்இ4/8975/2001**

தனியர் 01.10.2001 முதல் பணிக்கு வராத செயலுக்காக மேற்கொள்ளப்பட்ட இவ்வொழுங்கு நடவடிக்கையின் மீது ஆணையரின் இறுதி ஆணை வேண்டி சமர்ப்பிக்கப்பட்ட குறிப்பில் உதவி ஆணையர் (பொ.நி.ம.ப) அவர்களின் 27.01.2005 நாளிட்ட குறிப்புரையில் தனியர் 01.10.2001 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் இருந்தது மற்றொரு நிகழ்வான கண்காணிப்பு மற்றும் ஊழல் தடுப்புத்துறையினரால் கையூட்டு பெறும்போது கைது செய்யப்பட்ட காரணத்தினாலா? இந்த கைது நிகழ்வுகள் தனியரை தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்ட நாள் மற்றும் மீண்டும் பணியில் சேர அனுமதித்து நாள் ஆகியவற்றை தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

தனியர் 06.09.2001 முதல் 30.09.2001 வரை ஈட்டியவிடுப்பு வேண்டி விண்ணப்பம் செய்துள்ளார் என்பதால், மேற்படி காலம் ஈட்டியவிடுப்பாக ஒப்புதல் வழங்க பணிப்பதிவேட்டில் தொகுப்பு-1, பக்கம்-21ல் தக்க பதிவு மேற்கொள்ளப்பட்டு ஒப்பம் இடப்பட்டுள்ளது. எனவே, இதனை தொடர்ந்து தனியர் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலமான 01.10.2001 முதல் 05.02.2004 வரையிலான காலங்களுக்கு அரசால் வரன்முறை படுத்த வேண்டும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தனியர் தன்னை மீண்டும் பணியில் சேர 06.02.2004 நாளிட்ட கடிதத்தின் மூலம் அனுமதி கோரியதை தொடர்ந்து அன்னார் மீதான ஒழுங்கு நடவடிக்கைக்கு எவ்வித குந்தகமுமின்றி மீண்டும் பணியில் சேர ஆணை வழங்கப்பட்டு 06.02.2004 முதல் மீண்டும் பணியில் சேர்ந்துள்ளார்.

ஒழுங்கு நடவடிக்கையின் இறுதி முடிவாக தனியர் 01.10.2001 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத செயலுக்காக துணை விதி 9(2)ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட இவ்வொழுங்கு நடவடிக்கையில் பெறப்பட்ட தனியரின் விளக்கம் விசாரணை அலுவலர் அறிக்கை மற்றும் கூடுதல் விளக்கத்தினை பரிசீலனை செய்து குற்றச்சாட்டுகள் நிரூபணமானதால் மூன்று ஆண்டுகள் ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்யலாம் என முடிவெடுக்கப்பட்டு அவ்வாறே இறுதி ஆணை வழங்கப்பட்டது.

The Madras Corporation Class III and IV Services (Discipline and appeal) by laws G.O.Ms.No.363, Rural Development and Local Administration dated 18th March 1983.

Penalties 5 (VI) Recovery from pay to the extent necessary of the monetary value equivalent to the amount of increment ordered to be with held, where such an order cannot be given effect to.

மேற்கூறப்பட்ட சென்னை மாநகராட்சி துணை விதியில் கண்டுள்ளவாறு வழங்கப்பட்ட தண்டனை காலம் ஓய்வுபெறும் தேதியை காட்டிலும் மிகைப்படுவதால் பணிக்காலத்திலேயே கணக்கிட்டு பிடித்தம் செய்யப்பட வேண்டும்.

ஆதலால், தனியர் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத 01.10.2001 முதல் 05.02.2004 வரையிலான காலம் ஓராண்டுக்கும் மிகைப்படுவதால் அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய அரசின் ஆணை பெற்று வரன்முறைப்படுத்தவும் ஆணை வழங்கப்பட்டது.

இதன் அடிப்படையில் அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய அரசின் ஆணை பெற்று பணிக்கு வராத காலத்தை முறைப்படுத்த நியமனக்குழுவின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:க.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ-18. மன்றச் செயலாளர்

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :161/2009 பொருள் எண். 24

**பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்**

திரு.ச.விஜயகுமார், லஸ்கர், நிலம் மற்றும் உடைமைத்துறை 22.05.1997 முதல் 07.07.1998 முடிய முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததற்காக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, தனியர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதால், மூன்று ஆண்டுகள் ஊதிய உயர்வு திரண்ட பயனுடன் நிறுத்தம் செய்து இறுதி ஆணை வழங்கப்பட்டது. தனியர் இத்தண்டனை மீது நியமனக்குழுவிற்கு அளித்த மேல்முறையீடும் நிராகரிக்கப்பட்டது.

1998–99ம் ஆண்டு தணிக்கை அறிக்கை பத்தி எண்.15ல் மாநகராட்சி பணியாளர்கள் நடத்தை ஒழுங்கு விதி 9(1)ன்படியும், அரசு கடிதம் 12945,மாந3/98–3, நாள் 29.7.98ன்படியும் ஓராண்டிற்கு மேல் பணிக்கு வராமலிருந்தால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு 18(1)(2)(3) அடிப்படை விதியின் கீழ் பணிநீக்கம் செய்யப்பட வேண்டும் என்றும், ஆனால் அன்னாரை பணிநீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படாமல், ஊதிய நிறுத்தத் தண்டனை மட்டுமே வழங்கப்பட்டதால் ஆணையரின் மேற்கண்ட நடவடிக்கைக்கு அரசின் பின்னேற்பு பெற்றிடவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தெரிவிப்பது அரசணை எண்.1046, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (அடிப்படை விதி III) துறை, நாள் 13.11.1987ல் ஐந்து ஆண்டுகள் பணிமுடித்த நிரந்தர மற்றும் தகுதிகாண் பருவம் முடித்த அரசு பணியாளர்களுக்கு ஒரே சமயத்தில் ஓராண்டிற்குமேல் எந்தவகையான விடுப்பும், விதிகளின்படி மருத்துவ சான்றிதழ் பேரிலான ஈட்டா விடுப்பு (அ) படிப்பிற்கான விடுப்பினால் நீட்டிக்கப்படுவதை தவிர வழங்கப்படக்கூடாது என்றும், அவ்வாறு ஒரு வருடத்திற்கு மேலாக தொடர்ந்து விடுப்பில் இருந்துவிட்டு அல்லது வராமைக்கு பின் மீண்டும் பணியில் சேரவில்லை எனில் தமிழ்நாடு குடிமை பணிகள் (வகைப்பாடு, ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின்படி, வழிமுறைகளை பின்பற்றி, பணியிலிருந்து நீக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நேர்வில் தனியர் பணிக்கு வராமல் இருந்ததற்காக தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் தனியருக்கு ஊதிய நிறுத்த தண்டனை மட்டும் வழங்கப்பட்டது. தனியர் முன் அறிவிப்பின்றி பணிக்கு வராத காலம் (22.5.1997 முதல் 7.7.1998 முடிய) ஓராண்டிற்கு மேற்பட்டதால் அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்து பணிக்கு வராத காலத்தை வரன்முறைப்படுத்தப்பட வேண்டும். தனியர் வகிக்கும் பதவி வகுப்பு நான்கின்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் தனியர் பணிக்கு வராத காலத்தை வரன்முறைப்படுத்த மன்றத்தின் அனுமதி பெறப்படல் வேண்டும்.

எனவே, திரு.ச.விஜயகுமார், லஸ்கர், நிலம் மற்றும் உடைமைத்துறை அவர்களின் முன்னறிவிப்பின்றி பணிக்குவராத காலம் 22.05.1997 முதல் 07.07.1998 முடிய அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்து வரன்முறைப்படுத்த, நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:நிமஉது.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>ம.அ5.ந.க.எண்.சி2/2847/2004</u>
<u>ஆணையாளர் அவர்களின் 02.03.2009 நாளிட்ட குறிப்பு</u>

<u>30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண் :162/2009 பொருள் எண். 25

<u>பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்</u>

திரு.பி.சிங்கையா, துப்புரவு பணியாளர், கோட்டம்–74, பகுதி–15, அவர்கள் 04.12.2001 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக உதவி செயற்பொறியாளர், பகுதி.15, அவர்களால் ஒழுங்கு நடவடிக்கை ஏன் எடுக்கப்படக் கூடாது என்பதற்கு காரணம் கோரி குறிப்பாணை வழங்கப்பட்டது விளக்கம் பெறப்படவில்லை.

குற்றச்சாட்டு குறிப்பாணையில் சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ம்நிலை பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணைவிதி 9(2)ன் கீழ் குற்றங்கள் சுமத்தி விளக்கம் கேட்கப்பட்டது.

குற்றச்சாட்டு குறிப்பாணையினை 23.05.2002 அன்று பெற்றுக்கொண்ட பணியாளர் விளக்கம் ஏதும் அளிக்கவில்லை.

திரு.சுந்தரவடிவேலு, உதவி செயற்பொறியாளர், பகுதி.14, அவர்கள் விசாரணை அலுவலராக நியமிக்கப்பட்டதில் அவர் தனியரை விசாரணை செய்து தனது விசாரணை அறிக்கையினை சமர்பித்துள்ளார். அவ்வறிக்கையில் பணியாளர் மீது சுமத்தப்பட்ட 3 குற்றச்சாட்டுகளில் இரண்டு நிரூபணமாகியுள்ளது என தெரிவித்து உள்ளார். இதன் பேரில் முடிவு செய்வதை நிலுவையில் வைத்து 04.06.2003 முதல் இவர் மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு மற்றும் விசாரணை அலுவலரின் அறிக்கை ஆகியவை சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. தனியர் விசாரணையிலும், விசாரணை அறிக்கையின் பேரிலான விளக்கத்திலும் தான் படிப்பறிவு அற்றவர் என்றும் தன் மனைவி மனநிலை சரியில்லாததால் காணவில்லை என்றும் இக்காரணத்தால் தான் பணிக்கு வர இயலவில்லை. என்றும், தன் மனைவி மனநிலை சரியில்லாததாலும் காணாமல் போனமையால் அக்கவலையில் இருந்து விட்டதாகவும், அதனால் விளக்கம் அளிக்க இயலவில்லை. என்றும் மேலதிகாரிகள் வழங்கிய குறிப்பாணைக்கு விளக்கம் அளிக்காதது தன்னுடைய தவறு என்றும் தன் குடும்ப சூழ்நிலையின் காரணத்தால் அவ்வாறு நடந்து விட்டது என்றும் இந்த தவறை மீண்டும் செய்ய மாட்டேன் என்றும் தன்னால் பணிக்கு குந்தகம் ஏற்பட்டிருந்தால் இந்த ஒரு முறை தன்னை மன்னிக்கும்படியும் இது போன்ற தவறுகளை மீண்டும் செய்யமாட்டேன் என்றும் மீண்டும் பணிக்கு எடுத்துக்கொள்ள வேண்டியும் கோரியுள்ளார்.

குற்றச்சாட்டுகளின் பெயரில் தனியர் அளித்துள்ள விளக்கம் திருப்திகரமாக இல்லை. ஏற்கத்தக்கதாகவும் இல்லை. பணிக்கு வராதது குறித்து தகவல் அனுப்பாமல் இருந்ததற்கு இவரால் குறிப்பிடப்படும் எந்த காரணமும் இவர் செய்த தவறை நியாயப்படுத்துவதாக இல்லை. அனைத்து குற்றச்சாட்டுகளுமே நிரூபிக்கப்பட்டுள்ளன. நிரூபிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் கடுமையானவே இருப்பினும் கருணை நோக்கோடு திரு.சிங்கையா, துப்புரவு பணியாளர், கோட்டம்–74, அவர்களது ஊதிய உயர்வினை தொடர்விளைவின்றி மூன்றாண்டுகளுக்கு நிறுத்தம் செய்து ஆணை வழங்கப்பட்டது.

அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்ப 30.07.2004 நாளிட்ட மன்ற தீர்மானம் பெறப்பட்டது. தனியர் ஐந்து ஆண்டுகள் பணிமுடித்த பணியாளர் ஓராண்டுக்கு மேல் பணிக்கு வராத காலத்தை வரன்முறைப்படுத்த அ.வி.18(2)ஐ தளர்த்தி அரசாணை பெறப்பட வேண்டும்.

எனவே, 30.07.2004 நாளிட்ட மன்றத்தீர்மானத்தின்படி திரு.பி.சிங்கையா, துப்புரவு பணியாளர், கோட்டம்–74, பகுதி–15, அவர்கள் 04.12.2001 முதல் 03.06.2003 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலம் ஓராண்டினை கடந்துள்ளதால் அடிப்படை விதி 18(2) மற்றும் 18(3)ஐ தளர்வு செய்ய அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்ப பெறப்பட்ட மன்றத்தீர்மானத்தில் பகுதிமாற்றம் செய்து அடிப்படை விதி 18(3)ஐ தளர்வு செய்ய பெறப்பட்டதை ரத்து செய்து அடிப்படை விதி 18(2)ஐ மட்டும் தளர்வு செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.5.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :163/2009 பொருள் எண். 26

**பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்**

திரு.எம்.பென்சிலைய்யா, துப்புரவு பணியாளர், கோட்டம்–78, பகுதி–15, மண்டலம்–5, அவர்கள் 02.06.2004 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக குறிப்பாணை வழங்கப்பட்டது. அதனை பெற்ற பணியாளர் தனது 01.09.2005 நாளிட்ட விளக்கக் கடிதத்தில் அவரை நாய் கடித்து பிறகு அதன் விளைவாக மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டு தனது சொந்த கிராமத்திற்கு சென்று வைத்தியம் செய்து கொண்டிருந்த காரணத்தால் 02.06.2004லிருந்து பணிக்கு வரமுடியவில்லை என்றும், குறிப்பாணையின் விளக்கத்திற்கு பதில் கடிதம் மூலமாக விளக்கமும் அளித்தும், அவரது பணிப்பதிவேடு இல்லாத காரணத்தால் இதுநாள் வரையில் பணிக்கு எடுக்காமல் உள்ளார்கள் என்ற விவரத்தையும் இதனால் குடும்ப சூழ்நிலை மற்றும் பல வழிகளிலும் பாதிக்கப்பட்டு உள்ளதாகவும் தன்னை மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்ளுமாறு விளக்கம் அளித்துள்ளார்.

எனவே, சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ம் நிலைப் பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 9(2)ன் கீழ் கீழ்கண்ட குற்றச்சாட்டுகள் சுமத்தி விளக்கம் கேட்கப்பட்டது.

**குற்றச்சாட்டு எண்.1** தாங்கள் 02.06.2004 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது விதிகளை மீறின செயலாகும்.

**குற்றச்சாட்டுஎண்.2** மேலதிகாரிகள் வழங்கிய குறிப்பாணைக்கு காலதாமதமாக விளக்கமளித்துள்ளீர்.

**குற்றச்சாட்டு எண்.3** துப்புரவு பணிக்கு குந்தகம் விளைவித்துள்ளீர்.

மேற்கண்ட குற்றக்குறிப்பாணையை பெற்றுக் கொண்ட பணியாளர் தனது 03.10.2005 நாளிட்ட விளக்கத்தில் அவரை நாய் கடித்து பிறகு அதன் விளைவாக மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டு அவரது சொந்த கிராமத்திற்கு சென்று வைத்தியம் செய்து கொண்டிருந்த நிலையில், 02.06.2004லிருந்து பணிக்கு வர முடியவில்லை என்றும், அதே வேளையில் மாநகராட்சி துப்புரவு பணிக்கு பெருத்த குந்தகத்தை விளைவிக்கும் வகையில் இனி ஒரு போதும் செயல்படமாட்டேன் என்றும், தற்போது உடல் நிலை தேறிவிட்ட நிலையில், படிப்பறிவு இல்லாத தன் மீதும் தனது குடும்பத்தார் மீதும் கருணை கொண்டு தனக்கு அளித்துள்ள குற்றச்சாட்டு குறிப்பாணையில் தெரிவித்துள்ள அனைத்து குற்றச்சாட்டுகளை மன்னித்து மீண்டும் பணியில் சேர உத்தரவு வழங்க கோரியுள்ளார்.

பணியாளர் அளித்த விளக்கத்தின் பேரில் ஒழுங்கு நடவடிக்கைக்கு குந்தகமின்றி மீண்டும் பணியில் சேர ஆணை வழங்கப்பட்டது. அதன்படி பணியாளர் 20.12.2005 முதல் பணியில் சேர்ந்து பணிபுரிகிறார்.

தனியர் மீதுள்ள குற்றச்சாட்டுகளை விசாரணை செய்ய திரு.ஜெகன்னாதன், ஒய்வு பெற்ற தொழிலாளர் நல அலுவலர் அவர்கள் விசாரணை அலுவலராக நியமனம் செய்யப்பட்டார். அதன்படி பணியாளரை விசாரணை செய்த விசாரணை அலுவலர் தனது 10.05.2006 நாளிட்ட அறிக்கையில் சுமத்தப்பட்ட மூன்று குற்றச்சாட்டுகளில் முதல் குற்றச்சாட்டு நிரூபணமாகிறது எனவும், மற்ற இரண்டு குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை என அறிக்கையளித்துள்ளார்.

அதனை பெற்ற பணியாளர் தனது 26.09.2006 நாளிட்ட கூடுதல் விளக்க கடிதத்தில் கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

**குற்றச்சாட்டு 1க்கு விளக்கம்** 02.06.2004 அன்று அவசரமாக ஊருக்கு சென்ற தன்னை ஊரில் நாய் கடித்து விட்டதால் சிகிச்சைக்காக அங்கேயே தங்கவேண்டி வந்ததால் தன்னால் முன்கூட்டி விடுப்பு எடுக்க நேரிட்டதாகவும்,

**குற்றச்சாட்டு 2க்கு விளக்கம்** மேலதிகாரியின் குறிப்பாணை பெற்ற தான் மஞ்சள் காமாலை நோயினால் பாதிக்கப்பட்டதால் குறிப்பாணை கிடைத்த உடன் விளக்கம் அளிக்க முடியாமல் போனதென்றும்,

**குற்றச்சாட்டு 3க்கு விளக்கம்** முன் அறிவிப்பின்றி விடுப்பு எடுக்க நேரிட்டதற்காக வருத்தம் அடைந்த தான் தன் பணியில், பணி நேரத்தில் பணியில் சேர்ந்த நாள் முதல் குந்தகம் ஏற்படாமல் நடந்து வருவதாகவும், இனியும் தன் பணியில் குந்தகம் ஏற்படாமல் நடந்து கொள்வதாகவும், தெரிவித்துள்ளார்.

மேலும், முன்னறிவிப்பின்றி விடுப்பு எடுத்தமைக்காக காலதாமதமாக விளக்கம் அளித்தற்காகவும், தன்னை மன்னித்து தனக்கு எவ்வித தண்டனையும் வழங்காமல் தனது பணிவான விளக்கத்தை ஏற்றுக்கொள்ளுமாறும், இது போன்ற தவறு ஏற்படாமல் நடந்து கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

**ம.அ5.ந.க.எண்.சி2/7622/2005**

தனியர் 02.06.2004 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு விளக்கம், விசாரணை அலுவலரின் அறிக்கை, அதற்கு பணியாளரின் கூடுதல் விளக்கம் ஆகிய தொடர்புடைய ஆவணங்களின் அடிப்படையில் விசாரணை அலுவலர் அறிக்கை முழுவதுமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் கடுமையானவை. அவை தண்டனைக்குரியவை எனினும் நிகழ்வு கருணையுடன் அணுகியதில், இறுதி ஆணையாக ஓராண்டு ஊதிய உயர்வினை திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்தும், தனியர் பணிக்கு வராத காலமான 02.06.2004 முதல் 19.12.2005 வரை உள்ள காலம் ஓராண்டினை கடந்துள்ளதால், அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று வரன்முறைப்படுத்தவும் ஆணை வழங்கப்பட்டது.

எனவே, திரு.எம். பென்சிலைய்யா, துப்புரவு பணியாளர், கோட்டம்–75, பகுதி–15, மண்டலம்–5, அவர்கள் 02.06.2004 முதல் 19.12.2005 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலம் ஓராண்டினை கடந்துள்ளதால் அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்ப நியமனக்குழு மூலமாக வரன்முறைப்படுத்த மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.5.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18.　　　　மன்றச் செயலாளர்

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :164/2009 பொருள் எண்.27

**பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்**

திரு. இ. சண்முகம், நிரந்தர பணியாளர், உதவி மின் கோட்ட அலுவலகம் –1 கடந்த 01.06.2000 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததால் சென்னை மாநகராட்சி பணியாளர் ஒழுக்க நெறி விதிகளின்படி 9(2)ன் கீழ் கீழ்க்கண்ட குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கி விளக்கம் கோரப்பட்டது.

குற்றச்சாட்டு –1 – கடந்த 01.06.2000 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை.

குற்றச்சாட்டு –2 – இங்ஙனம் பணிக்கு வராமல் இருப்பதால் கோட்டப் பணிகள் வெகுவாக பாதிக்கப்படுகிறது.

குற்றக் குறிப்பாணையை பெற்றுக்கொண்டு தனியர் தனக்கு உடல்நலம் சரியில்லாததால் பணிக்கு வரவில்லை என விளக்கம் சமர்ப்பித்துள்ளார்.

இதன் தொடர்பாக விசாரணை அலுவலர் நியமனம் செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணைஅலுவலர் தனது விசாரணை அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

**குற்றச்சாட்டு–1** உண்மையிலேயே உடல் நலம் பாதிக்கப்பட்டு இருந்தால் தொலைபேசி மூலம் பணிக்கு வராத நிலையை தெரிவித்து இருக்கலாம். மேலும், வேறு நபர் மூலமாவது விடுப்பு கடிதம் அனுப்பி இருக்கலாம். ஆனால் விடுப்பு கடிதம் அளிக்க தவறியுள்ளார். இவருடைய விளக்கம் பின்யோசனையாகவே உள்ளதால் இக்குற்றச்சாட்டு நிரூபணமாகிறது.

**குற்றச்சாட்டு–2** இக்குறிப்பாணைக்கு விளக்கத்தில் பணியாளர் மஞ்சள் காமாலை நோயால் பாதிக்கப்பட்டு ஊரில் நாட்டு மருந்து சிகிச்சை பெற்றதால் அலுவலகத்திற்கு தெரியப்படுத்த முடியவில்லை என்று குற்றச்சாட்டை ஒப்புக் கொண்டுவிட்டார். மேலும், பணியாளர் இம்முறை மன்னித்து பணியில் சேர அனுமதி அளிக்கும்படி கோரி உள்ளார். எனவே, இக்குற்றச்சாட்டுகள் நிரூபணம் ஆகிறது.

மேற்கண்ட விசாரணை அறிக்கையை தனியருக்கு சார்வு செய்து பெறப்பட்ட 15.05.2001 நாளிட்ட விளக்க கடிதத்தில் தனக்கு மஞ்சள் காமாலை நோய் காரணமாக ஊரில் மருத்துவ சிகிச்சை பெற்று வந்ததால் 01.06.2000 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை. என்றும், ஊரில் சிகிச்சை பெற்றதால் அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்க இயலவில்லை. எனவும், இம்முறை மன்னித்து பணியில் சேர்த்துக் கொள்ளும்படி கோரியுள்ளார்.

எனவே, ஆணையாளரது உத்தேச முடிவின்படி, தனியர் ஒழுங்கு நடவடிக்கைக்கு குந்தகமின்றி பணியில் 25.08.2001 முதல் சேர அனுமதிக்கப்பட்டார். மேலும், தண்டனையாக பணிக்கு வராத நாட்களை ஊதியமில்லா விடுப்பாக பாவித்தும், ஆறு மாத காலத்திற்கு ஊதிய உயர்வை திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்தும், 19.10.2001 நாளிட்ட கூடுதல் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை வழங்கப்பட்டது.

இக்கோப்பின் மீது அரசு தளர்வாணை பெற முற்பட்ட தருணத்தில தனியர் மீண்டும் 8.6.2002 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமைக்கு ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டது.

தனியர் முதல் நிகழ்வாக பணிக்கு வராத காலம், (01.06.2000 முதல் 24.08.2001) ஓராண்டினைக் கடந்துள்ளதால், அக்காலத்தை வரன்முறைப்படுத்த அரசின் தளர்வாணை பெற்ற பின்னரே நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதால் கூடுதல் ஆணையர் அவர்களின்19.10.2001 நாளிட்ட செயல்முறை ஆணையில் பணிக்கு வராத காலமான 1.6.2000 முதல் 24.08.2001 வரை ஊதியமில்லா விடுப்பாக பாவித்து, வழங்கப்பட்ட ஆணையை ரத்து செய்தும், நியமனக் குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பி அடிப்படைவிதி 18(2)னை தளர்வு செய்து அரசின் தளர்வாணை பெற்றபின் 01.06.2000 முதல் 24.08.2001 வரையிலான காலத்தை வரன்முறைப்படுத்தப்படும் என ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை நாள். 01.10.2007 வழங்கப்பட்டது.

மீண்டும் இரண்டாவதாக நிகழ்வாக தனியர் 08.06.2002 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததால், உதவி மின் கோட்ட பொறியாளர்–1 அவர்கள் மூலம் விளக்கம் கோரிய குறிப்பாணை பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது. 16.11.2002 அன்று தனியர் கையொப்பமிட்டு பெற்றுக் கொண்டு, விளக்கம் ஏதும் அளிக்கவில்லை. எனவே, சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ம் நிலைப் பணியாளர்கள் ( ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) துணை விதி எண். 9 (1)ன் கீழ் கீழ்கண்டவாறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு விளக்கம் கோரப்பட்டது.

<u>ம.அ1.ந.க.எண்அ6/1390/02</u>

1) கடந்த 08.06.2002 முதல் எவ்வித முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை.

2) பணிக்கு வராமை குறித்து எவ்வித தகவலும் இது நாள் வரை அளிக்கவில்லை

3) முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததால் கோட்ட மின் விளக்கு பராமரிப்பு பணிக்கு பாதிப்பு ஏற்படுத்துதல்.

மேற்கண்ட குற்றக் குறிப்பாணைக்கு தனியர் எவ்விதவிளக்கமும் அளிக்காததால் 9 (1) ன்

கீழ் வழங்கப்பட்ட குற்றக் குறிப்பாணை விலக்கப்பட்டு, 9(2)ல் கீழ்க்கண்டவாறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு குறிப்பாணை வழங்கப்பட்டது.

1) கடந்த 8.06.2002 முதல் எவ்வித முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை

2) பணிக்கு வராமை குறித்து எவ்வித தகவலும் இது நாள் வரை அளிக்கவில்லை

3) முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததால் கோட்ட மின் விளக்கு பராமரிப்பு பணிக்கு பாதிப்பு ஏற்படுத்துதல்

4) பணிக்கு வர எவ்வித முயற்சியும் மேற்கொள்ளாதது பணியின் மீது அக்கறையின்மையை காட்டுகின்றது.

மேற்கண்ட குற்றக் குறிப்பாணையை தனியர் 08.03.04 அன்று கையொப்பமிட்டு நேரில் பெற்றுக் கொண்டு 19.03.2004 நாளிட்ட விளக்க கடிதத்தில், தனக்கு மஞ்கள் காமாலை காரணமாக சொந்த ஊரில் வைத்தியம் பார்த்துக் கொண்டிருந்த தருணத்தில் தன் தாயார் இறந்துவிட்டதாகவும், தான் இருந்த இடம் சிறிய கிராமம் ஆதலால், அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்க இயலவில்லை எனவும், கடன் தொல்லை காரணமாக பணிக்கு வரஇயலவில்லை. எனவும், இம்முறை மன்னித்து பணிக்கு எடுத்துக் கொள்ளும்படியும் கோரியுள்ளார். இதனடிப்படையில் ஒழுங்கு நடவடிக்கையை நிலுவையில் வைத்து, மீண்டும் பணிக்கு அனுமதித்து 31.3.2004 நாளிட்ட மண்டல அலுவலர்–1 அவர்களின் செயல்முறை ஆணை வழங்கப்பட்டது. ஆனால், தனியர் மீண்டும் உடல் நலக் குறைவு காரணமாக பணியில் சேராமல் 18.02.2005 முதல் பணியில் சேர்ந்துள்ளார்.

நிலுவையில் வைத்துள்ள ஒழுங்கு நடவடிக்கையை முடிவுக்கு கொண்டுவர விசாரணை அலுவலர் நியமிக்கப்பட்டு, தனியர் விசாரணைக்கு ஆஜராகி பின்வருமாறு விளக்கம் அளித்துள்ளார்.

தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் உண்மையானது தான், எனவும், தன் உடல் நிலை பாதிக்கப்பட்டு மஞ்சள் காமாலை ஏற்பட்டதன் காரணமாக தன் சொந்த கிராமத்திற்கு சென்று வைத்தியம் பார்த்த நிலையில் தன் தாயார் காலமாகிவிட்டதால், மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானதன் காரணமாக தான் பணிக்கு வரவில்லை எனவும், வேலை செய்யும் அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்க முடியாத நிலை ஏற்பட்டதாகவும், தான் தவறான எண்ணத்தில் தெரிந்தே இது போன்ற தவறை செய்யவில்லை எனவும், தன்னை மன்னித்து மீண்டும் பணியில் சேர அனுமதிக்குமாறும் கோரியுள்ளார்.

விசாரணை அலுவலர் தம் அறிக்கையில் தனியர் தம் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் உண்மைதான் என ஒப்புக் கொண்டுள்ளதாகவும், தன் உடல் நலம் பாதிக்கப்பட்டதன் காரணமாக தான் பணிக்கு வரவில்லை என்றும் தான் பணி செய்யும் அலுவலகத்திற்கு எவ்வித தகவலையும் தெரிவிக்கவில்லை என்றும், தெரிவித்துள்ளார்.

மேலும், தன் உடல் நலம் பாதிக்கப்பட்டமைக்கு எவ்வித மருத்துவ ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை, என்றும், சென்னை மாவட்டத்திலேயே மருத்துவ சிகிச்சை எடுப்பதற்கு சுகாதார நிலையங்கள் இருந்த போதிலும், பயன்படுத்தாமல், சொந்த ஊருக்கு சென்றதாகவும், வேறுசில விளக்கங்களும் தெரிவித்துள்ளதாகவும்,

இவர் முன்னறிவிப்பின்றி மின் பணிக்கு வராததன் காரணமாக பாதிப்பு ஏற்படுத்தி இருப்பதும் இவர் செய்யும் பணியின் மீதே போதிய அக்கறையின்றி செயல்பட்டிருப்பது உண்மையாகிறது எனவும், இதனடிப்படையில் முதல் 2 குற்றச்சாட்டுகளுக்கு இவர் அளித்த விளக்கங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை. என்றும் 3 மற்றும் 4வது குற்றச்சாட்டுகளை தெரிந்தே செய்திருப்பது தெரியவருகிறது என்றும் இதனால், இவர் மீது சுமத்தப்பட்ட 4 குற்றச்சாட்டுகளும் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணமாகிறது என தெரிவித்துள்ளார்.

விசாரணை அறிக்கை தனியருக்கு சார்வு செய்யப்பட்டது. தனியர் குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு அளித்த விளக்கத்தினை தவிர கூடுதல் விளக்கம் ஏதும் அளிக்கவில்லை.

**ம.அ1.ந.க.எண் அ6/1390/02**

தனியர் மீது தொடரப்பட்ட இவ்வொழுங்கு நடவடிக்கையில் தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தனியரின் விளக்கம், விசாரணை அலுவலரின் அறிக்கை, தனியரின் கூடுதல் விளக்கம் ஆகியவை தொடர்புடைய இதர ஆவணங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில் தனியர் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது கடுமையான தண்டனைக்குரிய குற்றமாக இருப்பினும் இந்நிகழ்வு கருணையுடன் அணுகப்பட்டதில், நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு தண்டனையாக, தனியரின் ஊதிய உயர்வினை மூன்றாண்டுகளுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்தது, மற்றும் தனியர் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலமான 08.06.2002 முதல் 17.02.2005 வரை ஓராண்டினைக் கடந்துள்ளதால், அடிப்படை விதி 18(2) தளர்வு செய்ய நியமனக்குழு மூலம் மன்றத்தின் அனுமதி பெற்று அரசின் தளர்வாணை பெற்றபின் வரன் முறைப்படுத்தப்படும் என 08.12.2006 நாளிட்ட ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை வழங்கப்பட்டது.

தனியர் சென்னை மாநகராட்சி பணியில் 26.02.1992 அன்று நியமனம் செய்யப்பட்டு, முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலமான 1.6.2000 முதல் 24.08.2001 வரை மற்றும் 8.6.2002 முதல் 17.2.2005 வரை இரு நிகழ்வுகளும், ஓராண்டினைக் கடந்துள்ளதாலும், இக்காலங்களை வரன்முறைப்படுத்த அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்து அரசு தளர்வாணை பெற மன்றத் தீர்மானத்திற்குட்பட்டு முன்மொழிவுகளுடன் கோப்பு அரசுக்கு அனுப்பப்பட்டது.

அரசுக் கடிதம் எண். 41018 / மா.ந.3/2007–1. நாள் 02.01.2008ல் மன்றத் தீர்மானம் பெற்றபின் செயற்குறிப்பினை அரசின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கும்படிகேட்டுக்கொள்ளப்பட்டது.

ஆகவே, திரு. இ. சண்முகம் நிரந்தர பணியாளர், உதவி கோட்ட மின் பொறியாளர் அலுவலகம், மண்டலம் –1 அவர்கள் 26.02.1998 அன்று சென்னை மாநகராட்சியில் பணிநியமனம் செய்யப்பட்டு 01.06.2000 முதல் 24.08.2001 வரை மற்றும் 8.6.2002 முதல் 17.2.2005 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத இரு நிகழ்வுகளும், ஓராண்டினைக் கடந்துள்ளதால் வரன்முறைப்படுத்த அடிப்படை விதி 18 (2)ஐ தளர்வு செய்து தளர்வாணை பெற்று வரன்முறைப்படுத்தும் பொருட்டு, அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்ப, நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.1.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.இ8/20600/2008
ஆணையாளர் அவர்களின் 26.05.2009 நாளிட்ட குறிப்பு

## 30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :165/2009 பொருள் எண். 28

### பண்டக காப்பாளர் பதவிக்கு ஊட்டப்பதவிகள் சேர்க்க அனுமதி

பண்டக காப்பாளர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் பிரிவு 3ன் கீழ் வருகிறது இப்பதவிக்கான காலமுறை ஊதிய விகிதம் ரூ. 5300–150–8300 ஆகும் சென்னை மாநகராட்சி 3 ஆம் (மற்றும்) 4 ஆம் நிலை சார்நிலை பணியாளர் வரைவு துணை விதிகள்1983ன்படி இப்பதவிக்குரிய கல்வித்தகுதி மற்றும் நியமன முறைகள் பின்வருமாறு அமைகிறது.

இப்பதவிக்குரிய ஊட்டப்பதவிகள்

2. உதவி பண்டக காப்பாளர் பதவியிலிருந்து பதவி உயர்வு மூலம்
3. பணிமாறுதல் அடிப்படையில், தேர்வு நிலை **பெயிலிப் மற்றும்** தேர்வு நிலை சார்ஜெண்ட் மூலம்

இப்பதவிக்கு வரையறுக்கப்பட்ட கல்வித்தகுதி

1. பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி
2. சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம் – 1 மற்றும் 2ல் தேர்ச்சி

தற்போது உதவி பண்டக காப்பாளர், தேர்வுநிலை பெயிலிப் மற்றும் தேர்வு நிலை சார்ஜண்ட் பதவிகளில் தகுதியுள்ள நபர்கள் எவரும் இல்லாத காரணத்தால் பல ஆண்டுகளாக பண்டக காப்பாளர் பதவி நிரப்பப்படாமலேயே உள்ளது. இதனால் பணிகள் தேக்கம் அடைந்துள்ளதால் தற்போது உதவியாளர்களே தற்காலிகமாக பண்டக காப்பாளர்களாக பொறுப்பு வகிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் பல்வேறு துறைகளைச் சார்ந்த பண்டக சாலைகளில் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பண்டக காப்பாளர் பணியிடங்கள் மொத்தம் 15 இவற்றில் தற்போது 8 பணியிடங்கள் (50 விழுக்காடுக்கும் அதிகமாக) நிரப்பப்படாமல் உள்ளது.

பண்டக காப்பாளர் பதவி உதவி பண்டக காப்பாளர் பதவியில் இருப்போரை கொண்டு நிரப்பப்பட வேண்டும். ஆனால், 09.04.1997 நாளிட்ட நியமனக்குழு தீர்மான எண். 6/97ன்படி தகுதியுள்ள நபர்கள் எவரும் உதவி பண்டக காப்பாளர் பதவியில் இல்லாத காரணத்தால் இது வரை பின்பற்றப்பட்ட அமைந்த விதிமுறைகளின் படி இப்பதவியின் ஒத்த ஊதிய விகிதத்தில் (ரூ.4000–100–6000) உள்ள தகுதி வாய்ந்த உதவியாளர் பதவியில் இருந்து அவர்களின் விருப்பத்தின் பெயரில் நிரப்புவதற்காக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இதன் அடிப்படையில் உதவியாளர்களை கொண்டு பண்டக காப்பாளர் காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளது.

13.03.1998 நாளிட்ட நியமனக்குழு தீர்மான எண்.40/98ன்படி உதவி பணப்பொறுப்பாளர்கள் பதவியில் பணியாற்றுபவர்களுக்கு பிரிவு மேலாளர், உரிமம் ஆய்வாளர் போன்ற பதவிகளில் பதவி உயர்வு வழங்க நிர்வாக ரீதியாக விதிகளின் படி இயலாத நிலை உள்ளதால் இவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் மேலாளர் பதவிக்கு இணையான பண்டக காப்பாளர் பதவிக்கு விருப்பம் தெரிவிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு நியமனக்குழுவின் ஒப்புதல் பெறப்பட்ட உதவியாளர் மற்றும் உதவி பணப்பொறுப்பாளர் பதவிகளில் பண்டக காப்பாளர் பதவிக்கு ஊட்டப்பதவிகளாக சேர்க்கவும் இத்திருத்தத்தை வரைவு துணை விதிகளில் மேற்கொள்ளவும் இதற்கு முன்னர் உதவியாளர் பதவியில் இருந்து பண்டக காப்பாளர்களாக பதவி உயர்வு அளிக்கப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு மற்றும் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு இனிவரும் காலங்களில் 1 உதவி பண்டக காப்பாளர், 2 உதவியாளர், 1 உதவி பணப் பொறுப்பாளர் என்ற விகிதாச்சாரத்தில் பண்டக காப்பாளர் பதவியை நிரப்பவும் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். இவ்விகிதாச்சாரத்தில் பணியாளர்கள் இல்லாத நிலையில் அடுத்த பதவியில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு அளிக்கலாம்.

உதவியாளர்கள், உதவிப் பணப் பொறுப்பாளர்கள் மற்றும் தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் பதவியிலுள்ளோர் பண்டகக் காப்பாளர் பதவிக்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். இதனடிப்படையிலும் பண்டக காப்பாளர் காலிப் பணியிடங்களை நிரப்பவேண்டியிருப்பதாலும் சென்னை மாநகராட்சி 3 ஆம் (ம) 4 ஆம் நிலை சார்நிலை பணியாளர் வரைவு துணை விதிகள் 1983 பணி விதிகளில் சில மாற்றங்கள் செய்யலாம் எனத் தெரிவித்து மன்றத்திற்கு குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

30.12.2008 அன்று நடைபெற்ற மன்றத்தின் சாதாரணக் கூட்டத்தில், ‘‘ எதிர்கட்சித் தலைவர் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் மாவட்ட குடும்ப நலத்துறையில் உள்ள தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் பதவிகளில் உள்ளவர்களையும் பதவி உயர்வில் சேர்ப்பது குறித்து நியமனக்குழு மூலம் ஆய்வு செய்து அடுத்தக் கூட்டத்தில் வைக்கலாம் என்று மன்றம் தீர்மானிக்கின்றது. எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>பொ.து.ந.க.எண்.இ8/20600/2008</u>

இது குறித்து தெரிவித்துக்கொள்வதாவது, தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் பதவியில் பணிபுரியும் தங்களையும் உதவியாளராக ஈர்த்துக் கொள்ளுமாறு கோரியதன் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட கோப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. அவர்களது கோரிக்கையின்படி உதவியாளர் பதவியில் ஈர்த்துக் கொள்ள அரசாணை பெறப்பட்ட பின்னரே விருப்பத்தின் அடிப்படையிலும் முதுநிலை அடிப்படையிலும் விகிதாச்சார அடிப்படையிலும் பண்டக காப்பாளர் பதவி உயர்வு அளிக்க இயலும் எனத் தெரிவித்து சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே, கீழ்காணும் இனங்களுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அ) ஏற்கனவே இருக்கும் ஊட்டப்பதவியான உதவி பண்டக காப்பாளர் பதவியுடன் விருப்பம் தெரிவிக்கும் உதவியாளர், மற்றும் உதவி பணப் பொறுப்பாளர்களை பண்டக காப்பாளர் பதவிக்குரிய ஊட்டப்பதவிகளாக சேர்க்கவும்.

ஆ) இப்பதவிக்கு 1 உதவி பண்டக காப்பாளர் 2 உதவியாளர்கள் 1 உதவி பணப்பொறுப்பாளர் என்ற விகிதாச்சாரத்தில் பண்டக காப்பாளர் தெரிவுப் பட்டியலை தயாரிக்கவும்.

இ) ஏற்கனவே வரைவு துணை விதிகளில் பண்டக காப்பாளர் பதவிக்கு தேர்வு நிலை பெய்லிப் (Bailiff) மற்றும் தேர்வு நிலை சார்ஜென்ட் (Sergeant) பதவிகள் ஊட்டப்பதவிகளாக சேர்க்கப்பட்டுள்ளன. தற்போது சென்னை மாநகராட்சி பணியில் பெய்லிப் (Bailiff) பதவியில் எவரும் பணியாற்றவில்லை, மேலும் அப்பதவி தற்போது அவசியமின்மை காரணமாக சென்னை மாநகராட்சியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளது. சார்ஜன்ட் பதவி, முன்னாள் இராணுவ பணியில் இருந்து ஓய்வு பெற்றவர்களைக் (Exservice Men) கொண்டு நிரப்பப்பட்டது. ஆனால் தற்போது விழிப்பு குழுமத்தில் பணிபுரிபவர்களைக் கொண்டு சார்ஜன்ட் பணியை நடத்தப்பட்டு வருவதால் சார்ஜன்ட் பதவிக்கு நியமனம் செய்வது நிறுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் பண்டக காப்பாளர் பதவிக்கு பெய்லிப் (Bailiff) மற்றும் சார்ஜன்ட் பதவிகளை ஊட்டப்பதவிகளாக இனியும் கருதாமல் அவ்விரு பதவிகளை பண்டக காப்பாளர் பதவிக்கு ஊட்டப்பதவிகள் என்ற நிலையிலிருந்து நீக்கம் செய்யவும் அத்திருத்தத்தை வரைவு துணை விதிகளில் மேற்கொள்ளவும் அவசியமாகின்றபடியால் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்படவேண்டும். மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு இனி பண்டக காப்பாளர் பதவிக்கு எதிர்காலத்தில் நிர்வாகத்தில் சிக்கல்கள் ஏற்படாவண்ணம் பதவி உயர்வின் மூலம் பண்டக காப்பாளர் பதவியின் காலிப்பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க இயலும்.

ஈ) முன்னதாக ஊட்டப்பதவி இல்லாத உதவியாளர் பதவியில் இருந்து பண்டக காப்பாளர் பதவி உயர்வு அளித்ததற்கும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ-18. மன்றச் செயலாளர்

**சு.து.ந.க.எண்.கா.பி.அ1/2285/09**
**ஆணையாளர் அவர்களின் 22.05.2009 நாளிட்ட குறிப்பு**

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :166/2009 பொருள் எண். 29

**ஒருவழி பணிமாறுதல்**

திரு.வ.இராமன், உதவியாளர், கால்நடைப்பிரிவு, சுகாதாரத்துறை அவர்கள் 15.04.2009 நாளிட்ட கடிதத்தில் தனது சொந்த ஊர் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள ஆரணி என்றும், தனது மனைவி, குழந்தைகள் குடும்ப சூழ்நிலையின் காரணமாக ஆரணியில் வசித்து வருகின்றனர் என்றும் தனது மனைவியின் உடல் நலம் சரியில்லாத காரணத்தால் பிற உறவினர்கள் உதவியுடன் ஆரணியில் இருப்பதால் அவர்கள் சென்னைக்கு வருவதற்கான வாய்ப்புகள் இல்லையென்றும், தான் சென்னையில் பணியாற்றி வருகின்ற காரணத்தால் தனது மனைவி உடல்நிலையும், குழந்தைகளின் படிப்பினையும் கவனிக்க இயலாமல் உள்ளது என்றும் தான் சென்னையில் தங்கி உணவு விடுதிகளில் உணவு உட்கொள்ளுவதால் அல்சர், வயிற்றுப்போக்கு போன்ற உபாதைகள் ஏற்படுகின்றன என்றும் தனது ஊதியத்தை வைத்து தனது குடும்பத்தையும் மற்றும் சென்னையில் தனது செலவுகளையும் மேற்கொள்ள மிகவும் கடினமாக உள்ளது என்றும் தன்னை வேலூர் மாநகராட்சிக்கு ஒரு வழி பணிமாறுதல் மூலமாக பணிமாற்றம் செய்து ஆணை வழங்கி தனக்கும் தன் குடும்பத்திற்க்கும் உதவி செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இது சம்மந்தமாக சமர்ப்பிக்கப்படுவது யாதெனில், திரு.வ.இராமன், உதவியாளர், கால்நடைப்பிரிவு, சுகாதாரத்துறை அவர்கள் சென்னை மாநகராட்சியில் முதன் முதலில் 31–12–1993 அன்று தட்டச்சராக பணியில் சேர்ந்தார். பிறகு 06–02–2004 அன்று உதவியாளராக பதவி உயர்வு பெற்று தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார். இவருக்கு தட்டச்சர் பதவியில் 31–12–1993 முதல் பணிவரன்முறை செய்யப்பட்டும் 31–12–1995 முதல் தட்டச்சர் பதவியில் தகுதிகாண் பருவமும் வழங்கப்பட்டது. மேலும் இவருக்கு 06–02–2004 முதல் உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. இவர் 31–12–1993 முதல் இந்நாள் வரை 15 வருடங்கள் 3 மாதங்களுக்கு மேலாக பணிபுரிந்து வருகிறார். இவர் மீது எந்த ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை. இவர் தற்போது உதவியாளர் பதவியில் அடிப்படை ஊதியம் ரூ. 4900/– +177/–த.ஊ.யை, ரூ.4000–100–6000 என்ற ஊதிய விகிதத்தில் பணியாற்றிக்கொண்டு வருகிறார். இவர் தனது விண்ணப்பக் கடிதத்தில் வேலூர் மாநகராட்சியில் உதவியாளர் பணியில் இளையவராக பணியாற்ற விருப்பம் தெரிவித்துள்ளார். இவர் கீழ்கண்ட கல்வி தகுதிகளை பெற்றுள்ளார்.

| | | |
|---|---|---|
| பி.ஏ. பட்டப்படிப்பு | ; | நவம்பர் 1984, சென்னை பல்கலைகழகம் |
| தட்டச்சு படிப்பு | ; | ஜனவரி 1986 ஆங்கிலம் உயர்நிலை தேர்ச்சி<br>மே 1987 தமிழ் உயர்நிலை தேர்ச்சி |
| சார்நிலை கணக்கு அலுவலர் பாகம் 1 | ; | மே 2002, தமிழ்நாடு அரசு தேர்வாணையம் |
| சார்நிலை கணக்கு அலுவலர் பாகம் 2 | ; | டிசம்பர் 2006, தமிழ்நாடு அரசு தேர்வாணையம் |
| மாவட்ட அலுவலக நடைமுறை தேர்வு | ; | மே 1998, தமிழ்நாடு அரசு தேர்வாணையம் |

இது சம்மந்தமாக சமர்ப்பித்துக் கொள்வது யாதெனில் சென்னை மாநகராட்சி, நகராண்மை கழக விதி 97(சி)ன் படியும் மற்றும் தமிழ்நாடு அரசு கடிதம் எண் 27274/மா.ந.5/96–1 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 8–07–1996ன் படியும், சென்னை மாநகராட்சி அலுவலர், சென்னை மாநகராட்சியிலிருந்து மற்ற மாநகராட்சிகளுக்கு மாறுதல் செய்வது குறித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதன்படி, இவருடைய விண்ணப்பக் கடிதத்தில் கோரியுள்ளபடி, இவருடைய கோரிக்கையை ஏற்று இவரை வேலூர் மாநகராட்சிக்கு ஒருவழிபணி மாறுதல் மூலம் விதிகளுக்குட்பட்டு மன்றத்தின் அனுமதி பெற்று பணியிடமாற்றம் செய்யலாம்.

**சு.து.ந.க.எண்.கா.பி.அ1/2285/09**

இது சம்மந்தமாக சமர்ப்பித்துக்கொள்வது யாதெனில், 09–03–2007 நாளிட்ட திரு.வ. இராமன், உதவியாளர், முன்னாள் கட்டடத்துறை, தற்போது கால்நடைப் பிரிவு, சுகாதாரத்துறை அவர்களின் கடிதத்தில் திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி நகராட்சிக்கு ஒருவழி பணிமாறுதல் அடிப்படையில் பணிமாற்றம் செய்யும்படி கோரியிருந்தார். அவருடைய கோரிக்கையினை ஏற்று மாமன்ற தீர்மானம் எண் 197/2007, நாள் 28–5–2007 மூலம் ஒருவழி பணிமாறுதலுக்கு மன்றத்தின் அனுமதி பெற்று இவ்வலுவலகக் கடிதம் க.து.ந.க.எண்.பி1/0240/2007, நாள் 1–6–2007ன் மூலம் நகராட்சி நிர்வாக ஆணையர், எழிலக இணைவகம், சேப்பாக்கம், சென்னை–5 அவர்களிடம் இதற்கான அரசாணை பெற்றுத் தரும்படி கோரப்பட்டது. நகராட்சி நிர்வாக இயக்குநர், எழிலக இணைவகம், சேப்பாக்கம், சென்னை – 5 அவர்கள் நகராட்சிகளில் உதவியாளர் பணியிடம் பதவி உயர்வு மூலம் நிரப்பப்படவேண்டிய பணியிடம் என்பதால் திரு.வ. இராமன், உதவியாளர் சென்னை மாநகராட்சி அவர்களின் ஆரணி நகராட்சிக்கு ஒரு வழி பணியிட பணிமாறுதல் கோரிக்கையினை ஏற்க இயலாது என கடிதம் ஓ.மு.எண்.15022/07/கே3, நாள்.04–04–2009 மூலம் தெரிவித்துள்ளார்கள்.

ஆதலால், திரு. வ. இராமன், உதவியாளர், முன்னாள் கட்டடத்துறை, தற்போது கால்நடைப்பிரிவு, சுகாதாரத்துறை அவர்களின் ஏற்கனவே 09–03–2007 நாளிட்ட ஆரணி நகராட்சிக்கு ஒருவழி பணிமாறுதலுக்கு அனுமதி பெற்ற மன்றத் தீர்மானம் எண் 197/2007, நாள் 28–5–2007–ஐ ரத்து செய்து, வேலூர் மாநகராட்சிக்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஒருவழி பணியிட பணிமாறுதல் செய்வதற்கு மன்றத்தின் (நியமனக்குழுவின் மூலமாக) அனுமதி வேண்டப்படுகிறது.

1. இப்பணியாளர் மாறுதலுக்கு பிறகு வேலூர் மாநகராட்சியில் தனது பதவிக்கான பணியில் இளையவராக கருதப்படுவார்.
2. இவர் சென்னை மாநகராட்சியில் கடைசியாக பெற்றுவரும் ஊதியத்துடன் நடைமுறையில் உள்ள, அவ்வப்போது வழங்கப்படும் அரசு ஆணைகளின் படி, படிகளையும் பெற அனுமதிக்கப்படுவார்.
3. இவர் தனது ஊதியத்தை வேலூர் மாநகராட்சி பணியாளர்களுடன் ஒப்பிட்டு ஊதிய முரண்பாடு கோர இயலாது.
4. இப்பணியாளரின் பொது வைப்பு நிதி, சிறப்பு சேமநல நிதி மற்றும் கூட்டு ஆயுள் காப்பீட்டு திட்டம் ஆகிய கணக்குகளை சென்னை மாநகராட்சியில் முடிக்கப்பட்டு வேலூர் மாநகராட்சிக்கு மாற்றப்படவேண்டும்.
5. இவர் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்த நாட்களுக்கான ஓய்வூதியம் மற்றும் விடுப்புக்கால சந்தாத் தொகை ( Leave Salary Contribution and Pensionery Contribution) ஆகியவைகளை கணக்கிட்டு வேலூர் மாநகராட்சிக்கு செலுத்தப்படவேண்டும்.
6. இவர் தனது வேண்டுகோளின்படி ஒருவழி பணியிட மாறுதலில் செல்லுவதால் பயணப்படி மற்றும் பணியில் சேருவதற்கான பணியேற்பிடை காலம் ஏதும் வழங்கப்படமாட்டாது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ5.ந.க.எண்.சி2/9486/2005**
**ஆணையாளர் அவர்களின் 28.02.2009 நாளிட்ட குறிப்பு**

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :167/2009 பொருள் எண்.30

**கல்வி தகுதி தளர்வு**

திரு.ஆர்.ராமசாமி, ஓட்டுநர், அவர்கள் சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை இ.பொ.து.ந.க.எண்.இ7/6272/99, நாள்.06.03.2000ன்படி நிரந்தர ஓட்டுநராக 16.03.2000 முதல் பணியமர்த்தப்பட்டுள்ளார். அன்னார் 5ம்வகுப்பு வரை படித்துள்ளார்.

தனியர் 28.02.2007 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வு பெற்றார் அன்னாருக்கு ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை வழங்க தணிக்கைத் துறைக்கு கோப்பு அனுப்பப்பட்டது.

தணிக்கைத் துறையின் 06.02.2007 நாளிட்ட கடிதத்தில் 1) பணிப்பதிவேடு முதல் பக்கத்தில் அன்னாரின் பிறந்த தேதியினை எந்த சான்று ஆவணத்தின் அடிப்படையில் பதியப்பட்டதற்கான விவரம் உரிய அலுவலரால் சான்றொப்பமிட வேண்டும் எனவும் 2) இப்பணியாளரை உரிய கல்வித் தகுதி இல்லாமல் பணியமர்த்தப்பட்டதற்கு அரசின் தளர்வாணை பெற வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இது குறித்து ஓட்டுநர் பதவிக்கு உரிய கல்வித் தகுதி என்ன என்பதையும், ஓட்டுநர்கள் இயந்திரப்பொறியியல் துறை மூலமாகத் தான் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டு வருவதால் எந்த கல்வித் தகுதியின் அடிப்படையில் மேற்கண்ட ஓட்டுநர் பணியமர்த்தப்பட்டார் என்பதற்கும், அரசின் தளர்வாணை பெறுவது குறித்த விவரத்தை தெரிவிக்க வேண்டி இயந்திரம் பொறியியல் துறைக்கு குறிப்பு அனுப்பப்பட்டது.

செயற்பொறியாளர் (இயந்திரம்–2) அவர்களின் நாளிட்ட குறிப்பில் மாநகராட்சியில் 4ம்நிலை பணியாளர்களாக நிரந்தரமாக / தற்காலிக பணியாற்றுபவர்கள் கனரக வாகன ஓட்டுநர் உரிமம் வைத்துள்ளவர்களுக்கு தெரிவு பயிற்சி மூலம் ஓட்டுநர் பதவி உயர்வு அளிக்கப்பட்ட போது கல்வித்தகுதியை கருத்தில் கொள்ளப்படவில்லை என்றும், வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் ஓட்டுநர் பதவிக்கு நியமனம் செய்ய கனரக வாகன உரிமத்துடன் எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்று இருக்க வேண்டுமென வரையறை செய்யப்பட்டுள்ளது எனவும், அரசின் தளர்வாணை பெற பொதுத்துறையின் கருத்துரை மற்றும் வழிகாட்டு முறையை பெற்று மேல்நடவடிக்கை எடுக்குமாறும் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து தெரிவிப்பது யாதெனில், திரு.ஆர்.ராமசாமி, ஓட்டுநர், அவர்கள் மன்றத் தீர்மான எண்.2119/93 நாள்.24.05.1993 மற்றும் மின் துறை ஆணை எண்.Z.O.V.C.No.ADEE/2659/93ன்படி 27.05.1993 முதல் தற்காலிக ஓட்டுநராக பணியில் சேர்ந்து பின்னர் 16.03.2000 முதல் நிரந்தர ஓட்டுநராக பணியமர்வு செய்யப்பட்டார். இவர் 5ம் வகுப்பு வரை படித்துள்ளார். 89 நாட்கள் தற்காலிக பணியில் இருந்தபோது பணிப்பதிவேடு துவக்கப்படவில்லை எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே, 28.02.2007 முதல் ஓய்வுபெற்ற திரு.ஆர்.ராமசாமி, ஓட்டுநர், அவர்கள் உரிய கல்வித் தகுதி இல்லாமல் பணியமர்த்தப்பட்டதற்கு அரசின் தளர்வாணை பெற அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.5.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.ஈ3/8271/09

ஆணையாளர் அவர்களின் 12.06.2009 நாளிட்ட குறிப்பு

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :168/2009 பொருள் எண்.31

**மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம் மற்றும் உடமைத்துறை) பொறுப்பேற்ற விவரம்**

அரசாணை (நிலை) எண்.844, பொது (சிறப்பு—அ) துறை, நாள்.01.03.2009ன்படி திருமதி.எஸ்.அமிர்த ஜோதி, மாவட்ட வருவாய் அலுவலர், அவர்கள் சென்னை மாநகராட்சியில் நிலம் மற்றும் உடமைத்துறையில் மாவட்ட வருவாய் அலுவலராக 11.03.2009 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் நியமனக்குழு மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
தகவலுக்காகவும், பதிவிற்காகவும் சமர்ப்பிக்கின்றது "

‘‘இதனை மன்றம் பதிவு செய்கின்றது’’

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ—18. மன்றச் செயலாளர்